"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2024



ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 - 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

மணி 32

# கலசம்
KALASAM

ஒலி 111

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# "கனவு மெய்ப்பட வேண்டும்"

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் 23 ஆவது சைவ மாநாட்டை அண்மையில் நடத்தியது. கடந்த ஜூன் மாதம் 22, 23 ஆகிய திகதிகளில் இம்மாநாடு நடந்தது. “சைவமும் தமிழிசையும்” என்ற தலைப்பில் இருதினங்கள் நடந்த நிகழ்வில் பண்ணிசை ஓதப்பட்டது. பல சொற் பொழிவுகளும் நடந்தன. சென்ற (110ஆவது) கலசம் இதழிலேதான் “சந்தேகங்கள் தீர்ப்பீர்களா?” என்ற தலைப்பில் கலசத்தின் கருத்தை வெளியிட்டிருந்தோம். முந்தைய கலசம் இதழ்களிலும் திருமுறைகளின் முக்கியத்தையும், கோயில்களில் அவை தவறாமல் முறையாக ஓதப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தி வந்திருக்கிறோம். எமது கேள்விகளுக்கும் ஆதங்கங்களுக்கும் இந்தச் சைவமாநாடு ஓரளவு பதில் அளித்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

இந்நாட்டிலே பிறந்து வளர்ந்து, மூன்றாவது தலைமுறையை உருவாக்கி வரும் வயதினருக்கு ஏற்ப நிகழ்வு நடந்தமை மகிழ்வைத் தருகிறது. தருமை ஆதீனப் புலவர் சிவத்திரு மதுசூதனன் கலைச்செல்வன் அவர்கள் இளைய தலைமுறையினரின் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் விளக்கங்களோடு அழகாக இரு நாள்களும் பதில் சொன்னார். திருக்கயிலாய ஸ்ரீகந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீன ஸ்ரீகார்யம் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் இரு நாள்களும் காலையில் உரையாற்றியும் மாலையில் திருமுறைகளை விளக்கத்தோடு ஓதியும் பல தகவல்களைப் பகிர்ந்துகொண்டார். கோயில்களில் வேதம் ஓதி, சிவாசாரியர்கள் முறையாக அர்ச்சனை செய்வது முக்கியம். அதுபோல ஓதுவாமூர்த்திகளை நியமித்துத் திருமுறைகளை முறைப்படி ஓதுவதும் மிக முக்கியம் என்ற கருத்தை அவர் பத்தியுணர்வுடன் வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டில், திருக்கோயில் ஒன்றியத்தின் தலைவர் மருத்துவகலாநிதி திரு ச மகேஸ்வரன் அவர்களின் கடின உழைப்பும் முயற்சியும் நன்கு தெரிந்தன. திருமுறையில் அவருக்கிருக்கும் ஈடுபாடு நிகழ்வுகளில் நன்கு பிரதிபலித்தது. அவருக்கு உதவியவர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

மாநாடு நடத்துவதோடு நிற்காது, தொடர்ந்து திருமுறைகளை அடுத்த தலைமுறைக்குக் கற்பிக்கவும் கோயில்களிலே முறையாகத் திருமுறைகளை ஓதுவதற்கும் ஓதுவார்களை அமர்த்தவேண்டும். ஆலய தருமகருத்தாக்கள் முயன்று செய்வதன்மூலம் நமது கனவு மெய்ப்படவேண்டும்.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| நகர் செய்தல் - கந்தபுராணச் சிந்தனைகள் | 03 |
| நாவலர் கல்விப் பரம்பரையில் ஒருவர் | 05 |
| Saiva School of Hinduism | 09 |
| பாடரவம் கேட்ட பகல் | 13 |
| திருத்தணி - பயணக்கட்டுரை | 15 |
| கேள்வி பதில் | 19 |
| பேராசிரியரின் பார்வையில் | 20 |
| சொல்லும் நயம் | 27 |
| தேவார மூவருக்கு முன் சைவத்தொண்டு | 31 |
| திருக்குறள் கதைகள் | 35 |
| கூத்தனின் பன்னிரு கூத்துக்கள் | 39 |
| பாஞ்சாலி சபதம் | 42 |


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**




ஒரு கிராமத்தின் தற்சிறப்பான இயல்பு என்னவென்றால், அங்கு இருக்கின்ற மக்கள் எல்லோரும் கிட்டத்தட்ட ஒரே அந்தஸ்து, வாழ்க்கைமுறை, உணவு, உடை, கலாசாரம் என்பனவற்றைக் கொண்டிருத்தலும் அவற்றினாலே ஏற்படுகின்ற ஒன்றிணைந்த கூட்டு வாழ்க்கையைக் கொண்டிருத்தலுமாகும். நகரமோ இதற்கு நேர்மாறாக இந்த ஓரினத் தன்மையற்று, பல்லினத் தன்மையைக் கொண்டிருக்கும். உலகிலுள்ள பெரிய நகரங்களைப் பார்த்தோமாயின், அவை பொருளாதார, சமயம், கல்வி, பொழுதுபோக்கு, சுகாரோக்கியச் சூழ்நிலை, சுவாத்தியக் குடியிருப்பு என்ற காரணிகளில் ஒன்றிலோ, பலவற்றிலோ பெயர்பெற்றிருப்பதைக் காணலாம். உதாரணத்துக்கு, கல்வியை எடுத்துக்கொண்டோமானால், உயர்கல்வி சேர்ந்த ஆராய்ச்சிக்கு ஒக்ஸ்போர்ட் (Oxford) உம், தொடர்புசாதனங்கட்கு இலண்டன், நியூயோர்க் போன்றவையும் பழமையைப் போற்றும் நூதனசாலைகளுக்கு ரோமாபுரியும், சரித்திர சம்பந்தமான புனித ஸ்தலங்களுக்கு ஷேக்ஸ்பியர் பிறந்த Stratford Upon Avon உம் உதாரணங்களாக இருக்கும். இந்த நகரங்களிலே இவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்த்தற்குரிய வசதிகள் அந்நகரின் அமைப்பில் பின்னிப் பிணைந்திருக்கும். அது மாத்திரமன்றி, அந்நகரிலே வாழ்கின்ற பல்லின மக்களும் தம் வாழ்க்கையை இனிதே அநுபவிக்கத் தேவையான வசதிகள் யாவும் அங்கே செய்யப்பட்டிருக்கும். இது இன்றைய விஞ்ஞான தொழில் நுட்பங்களில் முன்னேறிய உலகத்து நகரங்கள். இவற்றை உருவாக்குபவர்கள் (Designers) இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டே செய்வார்கள். கந்தபுராணம் சூரனுக்கான தலைநகரை அமைத்த விதத்தைச் சொல்கிறது.

சுக்கிராசாரியார், அமைக்கவேண்டிய நகரத்தின் எல்லையை, பரப்பளவைச் சொல்கிறார். அதன்படி அந்நகரை நிர்மாணித்த தேவதச்சன் தென்கடலின் நடுவே எண்பதினாயிரம் யோசனைப் பரப்பைப் பூமியில் உள்ள மலைகளால் நிரப்பி நிலத்தைச் சமன்செய்கிறான். அப்பரப்பைச் சுற்றி மதிலமைத்து நான்கு வாயில்கள் வைத்து, ஏனைய மதில் உறுப்புக்களையும் உருவாக்கினான். இந்நான்கு வாயில்களுக்கு மேருமலைபோன்ற பெரிய கோபுரங்களை அமைத்தான். அவற்றுக்குப் பக்கத்திலே மாளிகையுடைய பல தெருக்களை அமைத்தான். இவையெல்லாம் சாமானியருக்கு உரியவை. கணிகையர் வீதிக்கிசைந்த மாளிகைகளையும், ஆடல் செய்யத்தக்க பெரிய மண்டபங்களையும் அமைத்தான். இந்த மாளிகைகள் ஒவ்வொன்றிலும் திண்ணைகளையும் மண்டபங்களையும் அழகான முற்றங்களையும் அமைத்தான். சிங்கங்கள் விளங்கும் அழகான கோபுரங்களையும், செய்குன்றுகளையும், சபைகளையும், மன்றங்களையும், சோலைகளையும், பொய்கைகளையும் தனித்தனியே இயற்றினான். அந்த இடத்தில் நடுநாயகமாக ஒரு பெரிய மதிலை அமைத்துச் சூரபன்மன் இருக்க, அந்த எல்லைக்குள் ஓர் அரண்மனையை அழகு பொருந்த அவன் அமைத்தான்.

Dr ச சிவலோகநாதன்

ஆயதன் நடுவுற அயுத வெல்லையுள்
பாயதோர் நெடுமதில் பயில நல்கியே
மாயவள் திருமகன் வைக ஆங்கொரு
கோயிலை எழில்பெறக் குயிற்றி னானரோ

- நகர்செய் படலம்

அங்கே யானைகளும், செறிந்த தேர்களும், குதிரைகளும் போய்வரத்தக்க வாயில்களும், தொடர்ச்சியான திண்ணைகளும், பொன்போன்ற உச்சிகளை உடைய கோபுரங்களும், செய் குன்றுகளும் அமைத்தான். யானைகள் கட்டுவதற்குரிய இடங்களும் குதிரைகள் நிற்பதற்கான இடங்களும் காலாட்படைகள் இருத்தற்கான இடங்களும் அமைத்தான். அசுரர் தலைவர்கள் தங்குதற்கேற்ப இடங்களையும் அமைத்தான். அரம்பையர்கள் அனைவரும் நடனம் செய்வதற்குரிய நடனமண்டபங்களும், பாடலின் முறைமை பொருந்தப்பெற்ற பசும்பொன் மண்டபங்களும், யாழ் வாசிக்கும் மண்டபங்களும் அமைத்தான். எப்போதும் வேத ஒலி இசைக்கப் பெறுவதற்கான மண்டபமும், சிறந்த வேள்விகள் செய்வதற்கான மண்டபமும், மந்திர இயல்பினோர் இருக்கும் மண்டபமும், இந்திரன் போன்றோர் இருக்கும் மண்டபமும் அமைத்தான்.

சந்ததம் மறையொலி தழங்கு மண்டபம்
முந்திய வேள்விகள் முயலும் மண்டபம்
மந்திர இயல்பினோர் மருவு மண்டபம்
இந்திரன் முதலினோர் இருக்கும் மண்டபம்

- நகர்செய் படலம்

அவுணர் தலைவரின் கொலுமண்டபம், பண்டசாலைகள், சிவபெருமான் கொடுத்த தெய்வப் படைக்கலங்களை வைக்கும் படைக்கலச் சாலைகள், வாசனைத் திரவியங்கள் வைக்கும் மண்டபம், பெண்கள் தங்கியிருக்கும் மண்டபம் என்பனவற்றையும் அமைத்தான். சூரனுடைய பட்ட மகிஷிக்கும், இனிமேல் வரப்போகின்ற ஏனைய மனைவிமாருக்கும் மாளிகைகள் அமைத்தான். இவ்வாறு சூரனுடைய சகல தேவைகளுக்குமான ஒரு நகரை நிர்மாணித்து அதற்கு வீரமகேந்திர புரம் என்று பெயரும் இட்டான்.

கந்தபுராணம் இவ்வாறு விவரிக்கின்ற வீரமகேந்திர புரம் தற்போதைய விஞ்ஞான உலகின் நகரங்களும், நகர நிர்மாண முறைகளும் தோன்றும்முன்னர் சொல்லப்பட்டது. எனவே கந்தபுராணம் காட்டும் கலாசாரம் ஒரு முன்னேறிய பல்லின மக்கள் வாழ்கின்ற கலாசாரத்தைக் குறிப்பதாகும். அவற்றை விவரிக்கும் முறை நகரையோ, அல்லது தம் குடும்பத்தினருக்கு வதிவதற்கான வீட்டையோ எவ்வாறு சிறப்புற அமைக்கலாம் எனக் காட்டுவதாகும்.

# எல்லாம் சிவமயம்

ஜாதி வேறு, குலம் வேறு, பிறப்பு வேறு. ஆனால் இவை அத்தனையும் சிவனருள் பெற்ற சிவஞானிகட்குத் தோன்றமாட்டா. எல்லாம் ஒரே சிவமயமாய்த் தோன்றும். விறகுக் கடைக்குச் சென்றால் பலஜாதி விறகுகளை வெவ்வேறாகக் குவித்து வைத்திருப்பார்கள். புங்கம் விறகு, புளியம் விறகு, அத்தி விறகு, ஆலம் விறகு, வேப்பம் விறகு, வேலம் விறகு எனக் கூறுவர். அவற்றை ஒன்றாக்கித் தீ வைத்துவிட்டார்கள். வெந்து தணலாயின; பிறகு புங்கந்தணல், புளியந்தணல், அத்தித் தணல், ஆலந்தணல், வேப்பந்தணல், வேலந்தணல் என்று கூறமுடியாதல்லவா?

விறகு நிலையில் ஜாதியுண்டு; தணலானபின் ஜாதி நீங்கிவிட்டது. அதுபோல, குணம் குறியுள்ள சாமானிய நிலையில் ஜாதி, குலம், பிறப்பு என்ற தன்மைகள் உண்டு. குணம் குறியற்ற அதீத நிலையில் ஜாதி, குலம், பிறப்பு என்ற தடுமாற்றம் இல்லை; எல்லாம் சிவமாகத் தோன்றும்.

“ஜாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை”

“திருவாசகத் தேன்” - திருமுருக கிருபாநந்த வாரியார்

# நாவலர் கல்விப் பரம்பரையில் ஒருவர்

பா.துவாரகன்



திரு க உமாமகேசுவரன்

திரு உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள் 1998ஆம் வருடம் இலண்டன் வந்திருந்தார். மகாஜனக் கல்லூரியின் பழையமாணவர் சங்கம் அவரை அழைத்திருந்தது. அப்போது, லூயிஷாம் சிவன்கோயில், சைவ முன்னேற்றச் சங்கம், இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில், ஹைகேற் முருகன் கோயில், கிங்ஸ்டன் தமிழ்ப் பாடசாலை ஆகிய இடங்களில் சமய இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றினார். கலசம் சஞ்சிகையில் 1994 இல் இருந்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார். அதிதீரன், "வாழி செந்தமிழ் இலக்கிய லக்கண வரம்பு", யாதனை இதற்கு நேரா இயம்புவது, பூதராயர் - ஒரு நதிமூலம், அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன, நீரிலன்றி நிலத்திலும் என்பவை குறிப்பிடத் தக்கவை. நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் 1998 கலாசார மலரிலும் (இலண்டனில் இருந்தபோது) இராமன் புறமுதுகிட்டானா? என்ற கட்டுரையையும் எழுதியிருந்தார். அவர் 2024ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 20ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.

- ஆசிரியர் -

"உமாமகேசுவரன்" என்ற பெயர்க் காரணம்:

"நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்" என்ற மனோன்மனீயம் சுந்தரம் பிள்ளை அவர்களின் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிமுகப்படுத்தியவரும் தஞ்சாவூரில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவித்து 30 ஆண்டுகள் அதன் தலைவராய் விளங்கியவருமான தமிழ்வேள் வே. உமாமகேசுவரன் அவர்களுக்கும் இவரது தந்தையார் பண்டிதர் கதிரிப்பிள்ளை அவர்களுக்குமிடையே நட்பிருந்தது. பண்டிதர் கதிரிப்பிள்ளை தமிழ்வேள் வே. உமாமகேசுவரன் அவர்களிடத்துக் கொண்ட அபிமானம் காரணமாக தமது மூத்த புதல்வருக்கு உமாமகேசுவரன் என்று பெயரிட்டார்.

உமாமகேசுவரனின் தந்தை பண்டிதர் சின்னத்தம்பி கதிரிப்பிள்ளை தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். தாயார் கனகசபை சுந்தரம் ஆவரங்காலைச் சேர்ந்தவர்; எஸ்.எஸ்.சி சித்தியடைந்தவர். அக்காலத்தில் பெரும்பாலான பிரசவங்கள் வீட்டிலே நிகழ்வது வழமை. 1934.05.05 அன்று உமாமகேசுவரன் ஆவரங்காலில் தாயாரது வீட்டிலே பிறந்தார். பிரசவத்துக்கு உதவியவர் மிஸ் டோர். இவர் குதிரை வண்டியில் வீடுகளுக்குச் சென்று கர்ப்பவதிகளைப் பார்வையிடுவார். உமாமகேசுவரனுக்கு இரு சகோதரிகள் அமரர் பவளநாயகி அம்மை, சாரதாம்பிகை. சகோதரர் ஜெகதீஸ்வரம்பிள்ளை இலண்டனில் வசிக்கின்றார்; "கலசம்" சஞ்சிகையின் ஆசிரியர்.

பாடசாலைக் கல்வி:

குமாரசுவாமிப்புலவருடைய மாணவர் வேதாரண்யம் என்ற தமிழறிஞரே உமாமகேசுவரனுக்கு ஏடு தொடக்கியவர். தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் எழுதப்பட்ட ஏட்டைக் கொண்டு கல்வியங்காடு சைவ வித்தியாசாலையில் உமாமகேசுவரனுக்கு வித்தியாரம்பம் செய்தனர்.

இவரின் சிறிய தாயாராகிய நாகம்மா கல்வியங்காடு சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். முதலாம் தரத்தில் அநுமதிக்கு முன்னரே சிறியதாயாருடன் சைவ வித்தியாசாலைக்குச் சென்று கற்று வந்தார். முதலாம் தரத்தை இங்கு நிறைவு செய்த பின்னர்

விழிசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 2 முதல் தரம் 5 வரை கற்றார். இங்கு இவரது அப்பா கதிரிப்பிள்ளை தலைமையாசிரியராக இருந்தார். உதவியாசிரியர்கள் அத்தனைபேரும் அப்பாவுடைய மாணவர்கள். சிறுவனாகிய உமாவுக்கு எத்தகைய சிறப்பான ஆரம்பக்கல்வி கிடைத்திருக்கும்!


பின்னர் தெல்லிப்பழை மகாஜன ஆங்கில உயர்தரப் பாடசாலையில் ஒரு வருடம் கற்கிறார். இதனை 1ஆம் வருடம் (1st Year) என்று சொல்வார்கள். முதலாம் வருட நிறைவில் இவரின் தாயார் இறந்ததால் சிறுவனாகிய உமாமகேசுவரன் வீட்டிலிருந்தால் தினமும் தாயை நினைத்துக் கவலைப்படுவான் என்று கருதிய தந்தையார் தன் உறவினரான ஆ. கனகசபை கற்பித்த புசல்லாவைக்கு அனுப்புகின்றார். இங்கு சரஸ்வதி வித்தியாசாலையில் 2 ஆம் வருடம் கல்வியைத் தொடர்ந்த பின்னர் பரமேஸ்வரக் கல்லூரியில் சேர்கின்றார். எச்.எஸ்.சி வரை பரமேஸ்வரவில் பயின்றார். இங்கு நவநீதகிருஷ்ண பாரதியாரிடம் கற்கும் பேறுற்றார். பின்னர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்று ஆங்கில ஆசிரியப் பயிற்சியைப் பெற்றார்.

நாவலர் கல்விப் பாரம்பரியம்:

யாழ். பல்கலைக்கழகத்தில் 1991-92 கல்வியாண்டில் பயின்ற செல்வி சுகவாணி ஆறுமுகம் தனது முதலாம் ஆண்டுக் கல்வியைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்களைப் பேட்டி காண்கின்றார். அதிலே ஒரு கேள்வி, "இன்றுள்ள அறிஞர்களில் யார் யாரை நாவலர் கல்விப் பரம்பரையினராகக் கருதுகின்றீர்கள்?" இவ் வினாவுக்குப் பண்டிதர் மு. கந்தையா பின்வருமாறு விடை பகன்றார்:


ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

"இதைச் சிந்திக்கையில், நாவலர் கல்விப் பரம்பரையின் பண்பு என்ன என்பதை முதலிற் குறித்துக் கொள்ள வேண்டும். அறிவியல் விற்பத்தி பெறும் உண்மையான ஆவலோடு உயர்ந்த அறிவு நூல்களை விரும்பிக் கற்றலும், கற்றற்கநுகுணமான அறிவாசார சீலங்களொடு வாழ்தலும், கற்றவற்றைப் பொருளாதார நோக்கின்றி அர்ப்பண புத்தியோடு, ஒழுக்கமுடையோரைத் தெரிந்து கற்பித்தலும் நாவலர் கல்வி மரபுப் பண்பாகும். அவ்வகையில் கணேசையரின் தலைமாணாக்கர் இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகரும் அவரை அபிமான ஆசிரியராகக் கொண்டிருக்கும் பண்டிதர் க. உமாமகேசுவரம்பிள்ளை, பண்டிதர் ச.பொன்னுத்துரை என்ற இருவரும் நாவலர் கல்விப் பாரம்பரியத்தில் நிற்பவர்களாக என் அறிவிற்படுகிறது. அறிஞர்கள் எல்லார் விவரமும் எனக்கு எட்டாமையால் அவ்வகையில் வேறு ஒருவரும் இல்லை என்றுஞ் சொல்ல முடியாது. எவராயினும் மேற்குறித்த கல்வி மரபுப்பண்புள்ளவர் அப்பரம்பரையினராகக் கொள்ளப்படலாம்."


சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர்

உமாமகேசுவரன் நாவலர் கல்விப் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதற்கு பிறிதோர் விதமாகவும் நாம் விளக்கங் கூறலாம். உமாமகேசுவரனது தமிழறிவுக்கு அத்திவாரம் இட்டு அதனை வளர்த்தவர் தந்தையார் கதிரிப்பிள்ளை. இவர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் மாணாக்கர். புலவர் ஆறுமுகநாவலரிடம் முறைப்படி கற்றவர்.

உமாமகேசுவரன் நாவலர் வழிநின்று பயன்கருதாது தாம் கற்றவற்றை நன்மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் நோக்குடன் "கதிரிப்பிள்ளை கலைதெரி கழக"த்தை நிறுவினார். இக்கழகத்தின் கடிதத்தலைப்பில் "குருகுலவழி இலவச

உயர்தமிழ்க் கல்வி நிலையம்" என்ற மகுட வாசகம் காணப்படுவதானது, நாவலர் பரம்பரை வழி வாழ்வை அமைத்துக்கொள்ள விழைந்த பிள்ளையின் பெருவிருப்பை வெளிப்படுத்துகிறது.

சிறுவயதில் உமாமகேசுவரனுக்கு இலக்கண அம்புலிகாட்டி சிந்தையில் இன்பம் செழித்திடச் செய்தவரான இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர் அவர்கள் 1991.05.24 அன்று கதிரிப்பிள்ளை கலைதெரி கழகத்தைத் தெல்லிப்பழையில் இவர்களது வீட்டுக்கு அருகே இருந்த விழிதீட்டி ஞானவைரவர் ஆலயத்தில் ஆரம்பித்து வைத்தார். பண்டிதர் க. உமாமகேசுவரன், ஆசிரியர்கள் செ. சிவசுப்பிரமணியம், இ. நமசிவாயம், சைவப்புலவர் கலாபூஷணம் சு. செல்லத்துரை, புலவர் ம. பார்வதிநாதசிவம் ஆகியோர் கற்பித்தனர்.

ஓராண்டு பூர்த்தி விழாவையும் கொண்டாடினர். ஏறத்தாழ ஒரு வருடத்துக்கு மேல் விழிசிட்டியில் இயங்கிய கதிரிப்பிள்ளை கலைதெரி கழகத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பயின்றனர். ஒரு வருட நிறைவின் பின்னர் இடப்பெயர்வு காரணமாக பின்னர் அளவெட்டியிலும் தொடர்ந்து சுன்னாகத்திலும் வகுப்புக்கள் நடைபெற்றன. உமாமகேசுவரன் கொக்குவில் பூநாறி மரத்தடியில் வசித்த காலத்தில் இவரது இல்லத்துக்குப் பலர் வந்து கற்றனர். இவர்களில் கோப்பாய் கல்வியியற் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தனும் ஒருவர். யாழ். பல்கலைக்கழக நூலகராகக் கடமையாற்றிய விமலா வேல்தாஸ் மற்றொருவர். ஏனையவர்களது பெயர்களை அறியமுடியவில்லை. இக்காலப் பகுதியில் உமாமகேசுவரன் நல்லை ஆதீனத்திலும் கற்பித்து வந்தார். பின்னர் கொழும்பில் வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சங்கத்தில் பாடம் எடுத்தார் கொழும்பில் பலர் வீட்டிற்கு வந்தும் கற்றனர். பிற்காலத்தில் பண்டிதர் உமாமகேவரன் அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு மீளவந்து வாழ்ந்த காலத்திலும் ஓரிரு வருடங்கள் அவரால் நடமாடமுடியாத நிலையில் இருந்த போதும் கற்பித்தலை நிறுத்தவில்லை. சந்தேகம் கேட்டு வருவோருக்கு ஐயங்களை நீக்கி அறிவைப் புகட்டினார். அவரது இறுதிக் காலம் வரை துவாரகன் ஏறத்தாழ 19 வருடங்கள் அவரிடமே கற்று வந்தார்.

திரு. முருகவேள் மகாசேனன் பண்டிதர் உமாமகேசுவரனிடம் நன்னூல் முழுவதையும் முழுமையாகக் கற்றவர்களில் ஒருவர்.

சொல்லும் பொருளும் செயலும்:

உமாமகேசுவரன், "எனது முதல் ஆசிரியர் அப்பா தான்" என்பார். "தெல்லிப்பழையில் பிறந்ததும் அப்பாவுக்கு மகனாகப் பிறந்ததும் தவம்" என்று கூறாத நாளில்லை. சிறுவயதிலே வீட்டிலே விளையாடிக் கொண்டிருக்கும்போது அப்பா கூப்பிட்டு, கிராமபோன் இசைத்தட்டில் ஒலிக்கும் பாடலை, "இது என்ன இராகம் தெரியுமோ?" என்று கேட்பார். தெரியாவிட்டால், "இரு" என்று கூறி சொல்லித்தருவார். "நான் அப்பாவிடம் இன்னும் எவ்வளவோ கேட்டுப் படித்திருக்கலாம்" என்று உமாமகேசுவரன் தனது இறுதிநாள்களிலும் கவலையுடன் கூறுவார். தமிழை மட்டுமன்றி சங்கீதத்தையும் இராகங்களை வேறுபடுத்தி அறியும் ஆற்றலையும் அப்பாவிடமிருந்தே பெற்றார்.


பண்டிதர் கதிரிப்பிள்ளை

"கிணற்றிலே பட்டையால் இறைக்கும் போதும், கிடுகு பின்னும் போதும் அப்பாவிடம் படித்தவை பல நூறு விடயங்கள். செய்வது முக்கியமல்ல; ஒரு பிழை விடாமல் இருப்பது தான் முக்கியம்" என்று அப்பா அடிக்கடி சொல்வார். "ஒரு விடயத்தைபற்றி எழுதினாலோ அல்லது சொற் பொழிவு ஆற்றினாலோ அவர்கள் அதிலே கவனமாக இருப்பார்கள். பிழை கண்டு பொறுக்க

மாட்டார்கள். வாழ்க்கையிலும் அப்படித்தான். இது குமாரசுவாமிப் புலவரிடம் அப்பா கற்றுக் கொண்டது. அப்பா ஒரு நாளும் குமாரசுவாமிப்புலவரைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. ‘புலவர்’ என்றுதான் அழைப்பார். எங்கு பேசப் போனாலும் அல்லது ஒரு கட்டுரை எழுதினாலும் ஆதாரம் இல்லாமல் ஏதும் சொல்லக் கூடாது என்றும் ஒன்றைப் பற்றி பேசினாலோ அன்றி எழுதினாலோ ஒருவர் அதிலே கேள்வி (பிழை) கேட்கக் கூடாது” என்றும் அப்பா (கதிரிப்பிள்ளை) கூறுவார்.

ஆசிரியப்பிரான் உமாமகேசுவரன் சில திருக்குறள் வெண்பாக்களை எனக்கு அவ்வப்போது நினைவூட்டுவார்.

அதிலே ஒன்று பின்வருமாறு:

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. *(645)*

இதன் பொருள்: தாம் சொல்லக் கருதிய சொல்லை வெல்லவல்ல சொல்லாகிய வேறொரு சொல் இல்லாமையைத் தெரிந்து அச்சொல்லை சொல்லக் கடவர்.

# ARUMUKHA NAVALAR

Navalar received his early education in a small school, conducted by Subramaniapillai. Till his ninth year, his extra-ordinary intelligence had not attracted the attention even of his teacher. When he was nine years old, his father died. He saw that his father had been composing a Thamil play and had left it incomplete. He completed it. His brothers were struck by this wonderful performance, and sent him for higher studies, first to Saravanamuttu Pulavar, and then to his teacher, Senathiraja Mudaliyar. His teachers taught him at the usual rate, but soon found that their ration only kept him in starvation. They, therefore, gave him every day what they would give others for a month. He always got up at 4 o’clock in the morning and began his studies immediately after his religious observances. The only break in his study during the day was the meal time. He had a delicate constitution and he never took any bodily exercise. He was a perfect stranger to sports and games. His head alone was massive. He completed his Thamil studies in his twelfth year. He was then sent to the Methodist English School in Jaffna to study English. He soon gained proficiency in the language, and the head teacher of the school, Rev Peter Percival, asked him to teach English in the lower classes and Thamil in upper classes. Navalar spent his spare time in the study of Sanskrit and Religious Philosophy.

In his nineteenth year he was offered the work of translating the Bible into Thamil. He proposed to accept the offer on condition that he was free to follow his religious observances, to preach Shaivaism and to criticise other religions. The Rev gentleman had to accept him on his terms, as he could not get another like him to do the work.

Courtesy: Arumukha Navalar by S Shivapadasundaram B.A

# SAIVA SCHOOL OF HINDUISM

## (By late S. Shivapathasundaram B.A)

### CHAPTER 1
### CONVENTIONAL RELIGION

**[Continued from last issue]**


**The Value of Religions**

Another advantage of a religion is that it produces uniformity in the habits and customs of its followers and brings about unity among them. It serves to stabilise society especially if it has touched upon the social aspect of life.

But the unity in a particular religion has often caused disunion in the larger unit of the nation itself. The followers of some religions have taken up the position of distinct political units and created jealousies and factions in the State. Men have been led to think of their religion as they thought of their country and have endeavoured to increase the number of its adherents as they would extend the territorial limits of their country. Some men have been even more loyal to their religion and ready to sacrifice their country's interests for the sake of their religion. Wars have been fought between countries on the basis of religion.

Under the impulse of fanaticism people have gone so far as to think that men of other religions had no right to live in the world created by their own God, and inhumanly to massacre people of other religions; or to think that those who belonged to other religions were doomed to eternal damnation, and to use all means, fair and foul, to save them from hell-fire by taking them into their own fold. The power of religions in the past, whether for good or for evil, seems to have been real enough; but today they often serve merely as labels.

We have seen that very few follow a religion on grounds of suitability; many of those who appear to follow a religion do not really belong to that religion. For the sake of a mere name, atrocities are committed, and persecutions are carried out without a moment's thought. Those who run amok in the name of religion are usually those who are most indifferent to social and religious obligations enjoined on them. Their conduct is due partly to ignorance and blind zeal; but it is also due in part to the decay that has set in in most religions today.



## The Reform of Religions

If religious institutions are to last long and be really useful (to mankind), they ought to strengthen their weak points and undergo such modifications as will create inter-religious harmony and good will. Each religion must clearly define its scope and purpose and perfect its fourfold elements. Proselytising must cease. The public must regard it as a crime against humanity and the State and society must penalise it.

But whatever reform religious institutions may undergo, they can never become the real religion.The real religion is dynamic. It must be able to uplift a soul and ultimately unite it with God. The religions that we know of have no life, no driving force. They are only creatures and are themselves subject to growth and decay. One emperor comes fosters a religion, another comes and and wipes it out. The very lives of religions depend upon the whims and fancies of men. The real religion, instead of being a creature, must be a creator. It must sustain the people instead of being sustained by them. It must be able to guide us, control us and give us perfection. The next chapter will deal with it.

# CHAPTER II
# THE REAL  RELIGION

This chapter describes the characteristics of Real Religion, its functions, its fourfold knowledge and the Saiva view of religion.

## The Existence of Real Religion:

Real religion is that which lies behind such phrases as "religious experience" and "religious man." Most of us have had religious experiences. There have been moments in our lives when we thought more of the good of others than of our own, when we had real sympathy for others, and in helping them, enjoyed a calm serene joy, a joy without excitement. This is religious experience of the ordinary type.

Of a higher order is the experience of a man absorbed in supermundane thoughts, quite unconscious, for the time being, of his very existence in this world. This man has no thought of his body or his worldly possessions. Sacrificing any of these for the sake of others is therefore, a matter of no consequence to him. So he is all goodness, and has almost transcended even the ordinary distinction of right and wrong.

Of a lower type is the occasional desire even in a hardened criminal to help one in distress. The outstanding common factor of all these experiences is goodness.

A truly religious man, is not a partisan of any one religion, but one who views life as an occasion to extend his love for others and to efface himself as much as possible; in short, he is one who is good.

Thus real religion manifests its presence in goodness, whether it be in "religious experience" or in "religious men." It must therefore be a cause of goodness. An invariable concomitant

of goodness is truth. It is only the person who is in possession of truth that can really be good. He will not therefore do what he would if he had thought of himself as an individual pitted against other individuals. He is in tune with the infinite, and therefore is good.

Possession of basic truths is thus essential to absolute goodness. Again, wherever there are goodness and truth there are peace and harmony, which form bliss. So wherever there is goodness, there are truth and bliss. Religion thus manifests itself in three forms, goodness, truth and bliss, which are really its effects. Saivaism calls these Sat-chit-ananda. ("Sat" in sanskrit means that which lasts forever).

**The Characteristics of Real Religion:**

As there is evidence of various classes of men in various countries having religious experience, religion must be working, in some degree, in the whole human race. As even the most saintly man has the urge to go higher, there is no limit at which the urge stops.

The objective of the urge is therefore perfection. We may therefore define religion as the inward power which urges all living beings to strive to reach higher and higher stages, the highest being perfection. Acting on different kinds of people, the urge produces different degrees of goodness. These degrees are the goals of different religions in the conventional sense. Of these we shall speak later.

We have posited that the religious urge is universal. The urge exists in all living beings, work incessantly on them, and lead them along the path towards perfection.



**The Functions of Religion:**

The chief functions of this urge which induces evolution are twofold, the pusuit of ideals and the preservation of life. The former is the ultimate aim and the latter is subservient to it, as without life no kind of activity would be possible. Therefore, every effort made by a living being to procure food and rest and to seek pleasure is started by this urge.

It may be asked whether what are called wrong acts also are caused by this urge. The answer is, yes. Wrong acts are those that do not reach the fixed standard. Wrong acts differ from right acts only as failure in an examination differs from passing it. A pass is obtained if a certain standard is reached. Failure results in not reaching the standard. A right act requires reaching a certain standard of knowledge, desire, and self-control. If the standard is not reached, the act is wrong. The required standard cannot be reached all of a sudden. It has to be reached gradually.

Till it is reached, the act must be wrong. Therefore wrong acts are as necessary for our upliftment as right ones. No child can learn to walk without a number of falls. Falling is a necessary evil. As falling is failing to walk, every fall may appear to be a case of the child losing the skill it has attained to walk.

On the other hand, every fall is followed by the adjustment of some set of muscles in the joints and proves to be an occasion for gaining facility in walking. Similarly every wrong act of ours recoils on us, makes us realize its evil consequences, causes a tendency to avoid it, and to choose the right course thereafter. Wrongdoing is therefore a step towards the goal. Just as if the child were able to walk without a fall it would be all the better, so if a man could avoid wrongdoing it would be desirable; but it is impossible.

Not only the microcosm but the macrocosm also would appear to come under its sway. After the world had been formed and living beings sprang up, evolution seems to have been working for a purpose. One side of the purpose is the attainment of knowledge. The senses came one after another as means of giving knowledge by direct observation. Finally came the higher intellect of an Einstein and of those men whose vision was probably even keener than Einstein's, and produced, perhaps, far subtler theories, which have not reached the scientific world. If evolution had been directed only towards physical efficiency no special purpose could be attributed. But its pursuit of the means of attaining knowledge shows that it is direted by the beneficent power, which can be identified with the urge of religion.

Evolution has been working on the moral side too.It is tending to place joy and goodness together. The man who is good rejoices even when he undergoes physical suffering. The thief’s mind is not altogether happy even when even when he derives comforts and pleasure out of the wealth acquired by theft. The joy of the bad man causes bodily excitement and consequent depression and is hardly ever steady or lasting. His joy is really pain compared to the joy of the saint. Besides, might is giving place to the right. The enslaving of individuals is disappearing. The practice of enslaving nations is on the decline. Even animals are receiving fair treatment.

**- Continued on page 30**

# “பாடரவம் கேட்ட பகல்”



பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் ஒரு சைவமாநாடு நடத்தியது. ஜூன் மாதம் 22, 23 திகதி ஆகிய இரு நாள்கள் நடந்த அந்நிகழ்ச்சியில் நிறைவு நிகழ்வாக ஒரு பண்ணிசை நிகழ்வு நடந்தது. முதல் நாள் விம்பிள்டன் ஸ்ரீ கணபதி ஆலயத்திலும் இரண்டாம் நாள் லூயிஷாம் சிவன் கோயிலிலும் அந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வை வழங்கியவர் திருக்கயிலாய ஸ்ரீ கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீன ஸ்ரீகார்யம் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகள் அவர்கள்.

முந்தைய சைவ மாநாடுகளில் பக்திப் பாடல்கள் என்ற தலைப்பில் இசை நிகழ்ச்சிகள் நடை பெற்றன. இம்முறை பண்ணிசைக்கு முதலுரிமை கொடுத்த மாநாட்டு அமைப்பாளர்களைப் பாராட்டியே ஆகவேண்டும். இல்லையெனில் அந்த இரு நாள்களும் நமக்கு அமுதம் கிடைத்திருக்குமா?

திருமுறை இசையையும் அந்தத் திருமுறை இசை பற்றிய விளக்கங்களையும் விரிவாக, சுவைபட ஓதுவார் சுவாமிகளது வாய் வழியாகக் கேட்போது செவிகளும் நிறைந்தன; மனதும் குளிர்ந்தது. பண்ணில் இருந்துதான் தற்கால இராகங்கள் வந்தன என்பதை வலியுறுத்திச் சொன்னார் சுவாமிகள். கம்பீரமான குரல், நல்ல இசை அறிவு, தேவாரத்திருமுறைகளில் தேர்ச்சி, திருக்கோயில்கள் பற்றிய விவரங்கள் எல்லாமே அவரின் உரை நிகழ்வில் ஆற்றொழுக்காக வந்தன. நட்டபாடை, வியாழக்குறிஞ்சி, நட்டராகம், காந்தார பஞ்சமம் போன்ற பண்களை விளக்கி அவற்றில் அமைந்த தேவாரங்களைப் பாடியும் காட்டினார்கள்.

திருமுறைகளை நாம் தினமும் ஓதவேண்டும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவேண்டும், அவற்றிலுள்ள இசை நுணுக்கங்களைக் கற்றறிய வேண்டும் என்ற கருத்துக்களை உணர்வுபூர்வமாகச் சுவாமிகள் எடுத்துச் சொன்னார்கள். “திருமுறை பாடுவதால் என்ன பயன்?, அப்பர் சம்பந்தர் போன்ற ஞானிகளுக்குத்தான் அவை பலன் கொடுக்கும்!, இந்தக் காலத்தில் ஏன் அற்புதங்கள் நடப்பதில்லை?” என்றெல்லாம் கேள்விகள் சிலர் கேட்கிறார்கள். அந்தக் காலத்தில் மட்டும் அற்புதங்கள் நிகழவில்லை, பக்தி சிரத்தையுடன் ஓதுபவர்களுக்கு இந்தக் காலத்திலும் நன்மைகள் நடக்கின்றன என்பதை அந்தக் கேள்விகளுக்குப் பதிலாக சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

திருவாசகம் எப்படி, எந்தப் பண்ணில் பாடவேண்டும் என்று ஓதுவார்கள் ஆராய்ந்தபோது திருப்பெருந்துறைப் புராணத்தின்படி, முல்லைப் பண் பொருத்தமானது என்று முடிவுசெய்தார்களாம். அது என்ன இராகம் என்பதில் ஒரு குழப்பம் ஏற்பட்டதாம். மனதை

உருக்கக்கூடிய இராகம் மோகனம் என்பதால், முடிவில் மோகன இராகந்தான் திருவாசகம் பாடப் பொருத்தமானது என்று தீர்மானித்தார்களாம் என்று சொன்னார். ஆனால் திருவாசகம் சுவை கருதி வேறு இராகங்களிலும் தற்போது பாடப்படுகிறது என்பதையும் குறிப்பிடத் தவறவில்லை.

தேவாரத் திருமுறைகள் கடந்த ஆயிரம் ஆண்டுகளாகத்தான் ஓதப்பட்டு வருகின்றன என்றொரு தவறான நம்பிக்கை உள்ளது. ஆனால் லால்குடியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் தேவாரத்தை "பிடாரர்கள்" (ஓதுவார்கள்) ஓதியதாகவும் அவர்களுக்கு நிவந்தம் கொடுக்கப்பட்டதாகவும் குறிப்பு உள்ளது என்று சுவாமிகள் குறிப்பிட்டார்கள். கண்பார்வை அற்ற பிராடர்களுக்கு உதவ உதவியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கும் ஊதியம் கொடுக்கப்பட்டது. இதுபற்றிக் கலசத்திலும் முன்னர் ஒரு குறிப்பு வந்ததாக நினைவு.

இன்னொரு முக்கிய தகவலும் அறிய முடிந்தது. திருஞானசம்பந்தரின் தேவாரங்களிலிருந்து பல பண்ணிசை, பாடல் நுணுக்கங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. மொழி மாற்று - காடதணி, வியாழக்குறிஞ்சிப் பண், மாலைமாற்று - யாமாமாநீ, கௌசிகப் பண், வழிமொழி - சுரருலகு, சாதாரிப் பண், ஏகபாதம் - பிரமபுரத்துறை பெம்மான், வியாழக்குறிஞ்சி, இருக்குக் குறள் - அரனை உள்குவீர், குறிஞ்சிப்பண் என்பவை சில. இவற்றில் சிலவற்றின் சில அடிகளைப் பாடியும் காட்டினார்கள்.

மொத்தத்தில் இந்த இரு நாள்களும் நடந்த இந்நிகழ்வில் பல தகவல்களை அறியவும், பண்ணிசை நுணுக்கங்களைக் கேட்கவும், இரசிக்கவும், அநுபவிக்கவும் முடிந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பக்கவாத்தியமாக  திரு ஐ ஞானசுந்தரம் அவர்கள் வயலின் வாசிக்க, திரு ஐ சோமசுந்தரதேசிகர் அவர்கள் மிருதங்கம் வாசித்தார். அநுபவம் வாய்ந்த இந்த இருவரும் மிகுந்த அநுசரணையாக வாசித்து நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டினார்கள்.

வைரம் பதித்த வெண்குடையின் கீழ் இருந்து, பல நூறு ஊழிக்காலம் நாட்டை அரசாண்டாலும், பல வசதிகளை அநுபவித்தாலும், எத்தனை செல்வம் இருந்தாலும், எவ்வளவு உலகியல் வாழ்வில் மகிழ்விருந்தாலும் ஒரு நாள், ஒரேயொரு நாள், பாம்பினைத் தமது இடையிலே தரித்துள்ள சிவபெருமானின் அருட்பாடல்களைக் கேட்கும் இன்பம் இவை எல்லாவற்றுக்கும் மேலானது என்கிறார் ஐயடிகள் காடவர்கோன்.

நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே - கூற்றுதைத்தான்
ஆடரவக் கச்சா அரைக்கசைத்த அம்மான்றன்
பாடரவம் கேட்ட பகல்

- சேத்திரத் திருவெண்பா

ஒரு பகல் கேட்டாலே அவ்வளவு இன்பம் என்கிறார் ஐயடிகள் காடவர்கோன். நாமோ இரு நாள்கள் கேட்கும் பயன் பெற்றோம்; நமது ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

வழமையாக இவ்வாறான நிகழ்ச்சிகளில் முதியவர்களை மட்டுமே பார்க்க இயலும். ஆனால் இம்முறை இளவயதினரும் இருந்து பண்ணிசையை அநுபவித்தார்கள் என்பது இன்னொரு சிறப்பு. மாநாட்டுச் செயற்குழுவுக்கு எமது பாராட்டு உரியது.

- ஹிந்தோளம்



# திருத்தணிகை

## பயணக்கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

செருத்தணிகை என்ற பெயரே பின்னர் திருத்தணிகை ஆகிவிட்டது என்பர்.
செருத்தணிகை = செரு - தணி

செரு - கோபம், தணி - தணிதல், குறைதல்

கந்தபுராணத்திலும் செருத்தணிகை என்றே கூறப்பட்டுள்ளது.



மூலவர்: சுப்பிரமணியசுவாமி
உற்சவர்: சண்முகர்
அம்பாள்: தாயார் - வள்ளி, தெய்வானை
தீர்த்தம்: இந்திர தீர்த்தம், சரவணப்பொய்கை, சரஸ்வதி
புராணப்பெயர்: செருத்தணி

அருணகிரிநாதர், நக்கீரர், வள்ளலார் ஆகியோர் பாடிய தலம்.

முத்துசுவாமி தீட்சிதர் தமது குரு சொன்ன வாக்கின்படி திருத்தணி முருகனைத் தரிசிக்கச் சென்றார். தீட்சிதர் மலை ஏறும்போது எதிரில் வந்த முதியவர் ஒருவர், “முத்துசுவாமி! வாயைத் திற” என்றதும் இவர் வாயைத் திறந்தபோது வாயில் ஒரு கற்கண்டை இட்டுவிட்டு முதியவர் மறைந்தார். அப்போது முருகன் அருள் இதுவென்று உணர்ந்தார் தீட்சிதர். சுப்பிரமணிய சுவா மியின் அருளால் இசை உருப்படிகளை ஆக்கும் திறன் பெற்றார். தனது பாடல்களில் “குருகுஹ” என்ற முத்திரையை வைத்துப் பாடினார்.

வள்ளலார் ஒன்பது வயதில் தகப்பனின்றி தமையனுடன் வாழ்ந்த போது கண்ணாடியில் முருக தரிசனம் கிடைக்கப்பெற்றார். இதை:

“அறியாத பருவத்தே எனை வலிந்து அழைத்தே
ஆடல் செயும் திருவடிக்கே” எனப் பாடினார்.

சூரன் போரில் அசுரர்களை வென்று, பின்னர் கோபம் தணிந்து குறத்தி வள்ளியைக் காதல் மணம் புரிந்து மகிழ்ந்து எல்லையற்ற அற்புத நிலையில் இன்பமாக இருந்த இடமே திருத்தணி.

“குறவர் குடிசை நுழைந்தாண்டி - அந்தக்
கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி
துறவர் வணங்கும் புகழாண்டி - அவன்
தோற்றத்தைப் பாடி அடியுங்கடி - வள்ளலார்

இது 9ஆம் நூற்றாண்டு ஆலயம். பின்னர் சோழர்களால் புனரமைக்கப்பட்டது. மலைத்தொடர்களுக்குள் திருத்தணி மலையில் அமைந்தது. இதன் வடக்கே வெண்மையான பச்சரிசி மலை, தெற்கே புண்ணாக்கு மலை அமைந்துள்ளன. உயரம் 40 அடிகள். கடல் மட்டத்திலிருந்து 700 அடிகள் ஆகும். ஏனைய ஆறுபடை வீடுகளில் திருத்தணிதான் மேலான உயரத்தில் உள்ளது.

கோபுரம் திராவிட முறையில் 9 நிலைகளோடு அமைந்துள்ளது. வேல் முன்னின்று பிரகாசிக்கிறது. நான்கு பிரகாரங்களை உடைய ஆலயம். அதனை அண்மிக்க 365 படிகள் ஏறவேண்டும். 365 படிகளும் ஆங்கில வருடத்திலுள்ள நாள்கள் எண்ணைக் குறிக்கும்.



1917இல் முருக பக்தரான வள்ளிமலை சுவாமிகள் ஆங்கில புத்தாண்டு நாளில் படிபூசை செய்து ஆரம்பித்தார். “திருப்புகழ் ஓத, கருத்தினர் சேரும் திருத்தணி மேவும் பெருமாளே!” என்றவர், 1918 ஆம் ஆண்டு ஆங்கில மாதப்பிறப்பன்று சென்றார்.

தற்போது மக்கள் திரள் திரளாக இவ்வைபவத்தில் பங்குபற்றுகின்றனர். இதற்கென டிசம்பர் 31 ஆம் திகதி சென்னை சென்றால் (மத்திய) புகையிரத நிலையத்திலிருந்து திருத்தணிக்கு விசேட புகையிரத சேவை உள்ளது.

அடியார்கள் திருப்புகழ் பாடி, கூட்டாகச் செல்வதும், ஆலயத்திலுள்ளோர் மேள தாளத்துடன் வரவேற்பதும் மெய் மறக்கச் செய்யும் அற்புதக் காட்சியாகும். 31ஆம் திகதி தீபம் ஏற்றிய பின் முருக பக்தர்கள் ஒவ்வொரு படிக்கும் ஒரு திருப்புகழ் பாடி, தேங்காய் உடைத்து, கற்பூர ஆராத்தி செய்து ஈற்றில் அப்பன் சுப்பனை தரிசனம் செய்து திரளாக திரும்பும் வழக்கம் உண்டு. 365 படிகளும் நான்காம் பிரகாரத்திற்கு அழைத்துச் செல்கின்றன. இங்கு கற்பூரம் எரிக்கும் கொப்பரையும், தினந்தோறும் பூசை நேரத்தில் முகமதிய சமுதாயத்தினர் வாசிக்கும் வாத்திய மண்டபமும் இருக்கின்றன. மேலும் விஷ்ணு தீர்த்தம், நாக தீர்த்தம், இந்திர நிலச்சுனை இருக்கின்றன.

நான்காம் பிரகாரத்திலிருந்து கிழக்கு வாசல் வழியாகச் சென்றால் மூன்றாம் பிரகாரத்தை அடையலாம். இங்கு கொடிமர விநாயகர், உமாமகேஸ்வரர், உச்சிப்பிள்ளையாரைத் தரிசிக்கலாம். இதன் பின் இரண்டாவது பிரகாரத்தில் ஏகாம்பரேஸ்வரர், ஆறுமுகன் உற்சவமூர்த்திகளைக் கண்டு வணங்கலாம்.

பஞ்சாட்சரப்படிகள் மூலம் முதற்பிரகாரத்தில் கருவறையில் சாந்த சொரூபியாய், வலது கரத்தில் உஜ்ர வேலுடன் (இடிபோன்ற ஓசை எழுப்பும் சூலம் போன்றது) இடக்கையை மேல் இடதுகாலில் வைத்திருக்கும் நின்ற நிலையில் நிற்கும் திருத்தணியானை, மகிழ்வாக மனம்போல் அருள்பாலிப்பதை வணங்கலாம். முருகனின் மார்பில் ஒரு தழும்பு (பள்ளம் - சூரனோடு போரிடும்போது நேர்ந்தது) காணலாம். முருகனின் வாகனம் யானை ஆகும்.

“வேல் இல்லாத வேலவன்” - அலங்காரத்தின் போது தான் வேல், சேவல் கொடி ஆகியவை சாத்தப்படும். தெற்குத் திசையில் வள்ளிநாயகி, வடக்கில் தேவயானை இருவரும் தனிச்சந்நிதியில் இருக்கின்றனர். சற்று உயரத்தில் பாலசுப்பிரமணியர், சண்டிகேஸ்வரர், வைரவர் உளர். பைரவர் விசேடமானவர். நான்கு நாய்களோடு காட்சியளிக்கின்றார். ஒன்று வழமை போல்

பின்பக்கம், ஏனைய மூன்றும் பீடத்தைச் சுற்றி இருக்கின்றன. ( நான்கு வேதம்) கல்வியில் சிறப்புற மக்கள் இவரை வேண்டுவர்.
இங்கு கொடுக்கும் சந்தனம், இந்திரன் கொடுத்ததாகக் கருதப்படுகிறது. சந்தனக் கல்லிலே அரைக்கப்பட்டு, சாத்தப்படுகிறது. மக்கள் நீரில் கரைத்து அருந்துகின்றனர்.

கந்த சஷ்டி காலத்தில் இங்கு சூரசங்காரம், சூரனை முருகன் வென்றதால் நடப்பதில்லை. அன்று மலர் அபிடேகம் குளிர்மையாக நடைபெறுகிறது.

வெகுதூரத்திலிருந்து தணிகைப் பெயரைக் கேட்டாலும், கூறினாலும், நினைத்தாலும், இருக்கும் திசை நோக்கி வணங்கினாலும் வினைகள் நீங்கி அளவற்ற இன்பம் கிட்டுமென தணிகை புராணம் இயம்புகிறது.

பிரயாணம் :




திருத்தணிக்கு செல்லல் வேண்டும் எனக் கேட்டபோது, கார் சாரதி இரவு 9 மணிக்கு மேலாகிவிட்டது, கோயில் பூட்டி இருக்குமென அடித்துக் கூறினார். பிரயாணக் களைப்பால் அசந்து தூங்கி இருக்கும் மனை வியாரையும், என்னையும் எழுப்பி, “உங்களுக்கு Lucky sir, இன்று இரவு முழுவதும் கோயில் திறந்திருக்கும் என்றார். வருடத்தில் ஒரு நாள் சுவாமி சுற்றுலாச் சென்று ஊர் மக்களை அருள்பாலிப்பதுதான் காரணமாம்.

திருத்தணி சென்றோர் மன ஆறுதல், மகிழ்வு பெற்றோர் என்றாலும் எமக்கு எமை அறியாமலே வியந்து முருகனின் கிருபை என எண்ணிப் பேரானந்தம் அடைந்தோம். அடிவாரத்திலிருந்தே ஆரம்பித்தோம். முதலில் சரவணப்பொய்கை சென்று தலையில் நீர் தெளித்து, பின்னர் தேங்காய் கர்ப்பூரம் உடன் அபிடேகப் பொருள்களை வாங்கி 365 படிகள் ஏறி - களைப்பே இன்றி, முருகனது சந்நிதியை அடைந்தோம். கூட்டமே இல்லை. ஆண்டவனை ஆசை தீர ஆறுதலாகவே தரிசித்தோம். பூசகர் இருந்தார். சிறு பூசை எமக்குச் செய்தார். பின்னர் வள்ளி, தெய்வயானையை தனிச்சந்நிதிகளில் சென்று வணங்கினோம்.

எங்கும் தேடித்திரிந்து கிடைக்காத ஆறுமுகசுவாமி, வள்ளி, தெய்வானை, மயில்வாகனம் கொண்ட படத்தையும், முருகனின் இரு பாடல் ஒலிநாடாக்களையும் வாங்கினோம். தற்போதும் ஆறுமுகனின் இப்பாடல்களைக் கேட்கிறோம்.

திருத்தணி ஐந்தாம் படை வீடாகும். முருகன் பேரருள் பெற்ற அருணகிரிநாதரின், மந்திர நூலாகிய கந்தர் அநுபூதியில்

“உல்லாச நிராகுல, யோக இத
சல்லாப விநோதனும் நீ அலையோ!” என உள்ளது.

சல்லாபம் - கூடிப்பேசுகை, கதைத்தல், வினாவும் விடையும் எனத் தமிழ் அகராதி கூறுகிறது.

திருத்தணியில் முருகன் காதல் மணம் புரிந்து வள்ளியோடு கொஞ்சிக்குலாவி கோபம் தணிந்து நின்ற மகிழ்வான நிலையாகும்.

இதே கந்தர் அநுபூதியில் உள்ள 51 பாடல்களில் வள்ளியைப் பற்றி பல தடவைகள் வருகின்றன. ஆனால், மருந்துக்குக் கூட ஒருமுறை தனினும் தெய்வயானையைப் பற்றி மூச்சும் விடவில்லை. திருத்தணி ஆதாரத்தில் விசுத்தி ஆகும். விசுத்தி என்றால் சுத்தம், திருத்தம், தீர்த்தல், நிகர் என்பதாகும்.

திருவிழாக்கள்:

ஆடிக்கிருத்திகை
மாசிப் பெருந்திருவிழா - வள்ளி திருமணம்
பங்குனி உத்தரம்
கார்த்திகை விழா
கந்த சஷ்டி

திறக்கும் நேரங்கள்:

காலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை.
விசேட நாள்கள் : முழுநாளும்

பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன.
புகையிரதம் - திருத்தணி நிலையம்
விமான நிலையம் - திருப்பதி சென்னை

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் - சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் - றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் - பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் - செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் - தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் - கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் - கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் - பெருமாளே.

- திருப்புகழ்

தேர்த்திருவிழாவின் போது ஆறுமுகசுவாமி வீதிவலம் சென்று மக்களுக்கு மன ஆறுதல், மகிழ்ச்சி கொடுப்பார். இதனாற்றான் போலும் அவர் வதிவிடத்திற்கு திருத்தணி என நாமம் ஆலயத்துக்குச் சூட்டி உள்ளனர்.

"தணிகை வளர் சரவணபவா நின் தாள் சரணம்"

## ❄ பாரத தேசத்திற்கும் கடவுளுக்குமான பந்தம் எப்படிப்பட்டது?
## ❄ இது ஆன்மிக பூமிதானே?

**- குளித்தலை இராமலிங்கம் பதில்**

தமிழ்நாடு சிவபூமி. 224 புவனங்கள் இருக்கின்றன. புவனங்கள் பெரிது. "பெரிது பெரிது புவனம் பெரிது" என்பது ஔவை வாக்கு. 224 புவனங்களிற்கும் தமிழ்நாடுதான் முதன்மையான மூலஸ்தானம். தமிழ் நாட்டுக்கே முதல் நகரம் சென்னை. அது போல எல்லா உலகங்களிற்கும் மூலஸ்தானமாக இருப்பது தமிழ்நாடு. எமக்கு நாடு. சிவபெருமானுக்கு 224 புவனமும் வீடு. நம் வீடுகளில் நாம் பூசை அறை வைத்திருப்பது போல் தமிழ்நாடு அவருக்கு பூசை அறை. அதனால் இந்த நாட்டிற்கு என்ன பெருமை என்றால் சிவபெருமான் சிதம்பரத்தில் தாண்டவம் செய்யும் பெருமை. இப்படி தாண்டவம் எந்த நாட்டிலும் கிடையாது. தமிழ் நாட்டில் மட்டும் தான். அதனால் இந்த நாடு உயர்ந்தது. இந்த நாட்டில் மட்டும் தான். அதனால் இந்த நாடு உயர்ந்தது. இந்த நாட்டில் வாழ்பவர்கள் புண்ணியவான்கள். புண்ணியம் செய்தால் மேலே போகலாம்.




இந்த நாடு மிக உயர்ந்தநாடு. சிவபூமி. இந்த நாட்டிற்குரிய சமயம் சைவசமயம். கடவுள் சிவ பெருமான். அவனை அடைவதற்கு வழி. அவன் சொன்ன நூல் வழியே நின்று சிவபூசை பண்ணுதல். ஆசாரியனை அடைதல். திருநீறு பூசுதல், உருத்திராக்கம் அணிந்து கொள்ளுதல், பஞ்சாட்சரம் செபித்தல். தேவாராதி திருவாசகம் முதலான அருள் நூல்களைப் பாராயணம் செய்தல். பாவம் செய்யாமல் இருத்தல். புண்ணியத்தைச் செய்தல். செயலிலும், வாக்கிலும், மன திலும் நன்மை. இப்படி எல்லாம் செய்து சிவபெருமானின் அருளைப் பெறுவதற்கு இந்த நாடு பொருத்தமான நாடு. இந்த நாட்டில் பிறப்பதும், செய்ய வேண்டிய செயல்களைச் செய்வதும் அவசியமானது.

தமிழ் நாட்டில் சோழநாடு மிக உயர்ந்தது. சோழ நாட்டில்தான் சிதம்பரத்தில் தாண்டவம் ஆடுவதால் தமிழ்நாடு உயர்ந்தது. இந்த நாட்டில் சிவன் நம்மை வாழ வைத்திருக்கிறான். நாம் சரியாக வாழவில்லை என்றால் வேறோர் நாட்டிற்கு அனுப்பிவிடுவான். இந்த நாட்டில் நம் பெரி யோர்கள் வகுத்த பாரம்பரியத்தின்படி வாழவில்லை எனில் அன்பு இல்லாத, பண்பு இல்லாத சிவபூசை இல்லாத நாட்டிற்கு அனுப்பிவிடுவான். அதனால் இந்நாட்டில் வாழ்பவர்கள் எல்லாம் சைவமாக இருக்க வேண்டும். சிவபூசை செய்ய வேண்டும். எப்படியாயினும் வாழ்தல் வாழ்வல்ல அறத்தின் சார்பாக இப்படி வாழ வேண்டும் என்று சொல்ல வேண்டும் மைப்படி கண்டனெங்கும் நின்றுகொண்டு எழுதுகின்றான். இந்த நாடு மிகச் சிறந்த நாடு; நீதியிலே உயர்ந்த நாடு; பக்தியிலே உயர்ந்த நாடு.

## ❄ ஆகமம் என்றால் என்ன?

ஆகம விதிப்படி தான் கோயில் கட்டுவது, சுவாமி பிரதிஷ்டை பண்ணுவது, உற்சவம் பண்ணுவது கும்பாபிஷேகம் பண்ணுவது சகலவிதமான கைங்கரியங்களும் ஆகமத்தில் சொல்லப்பட்டபடியே தான் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஆகமம் சிவபெருமானே உயிர்கள் உய்வதற்காக அருளிச் செய்த நூல். அதனால் தான் மாணிக்கவாசகர் "ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க ...... "என்று திருவாசகத்தில் பாடுகிறார். அதனால் ஆகமம் சிவபெருமானுடைய சிறந்த நூல். அந்த நூலின்படிதான் சிவவழிபாடு சிவாலய பூசை அத்தனையும் நடக்கவேண்டும் என்று சிவ பெருமான் எழுதி வைத்திருக்கிறார்; அப்படியே நடந்து கொண்டும் இருக்கிறது. எல்லா நூல்களுக்கும் முதன்மையாக இருப்பது வேத சிவாகமம்.

**தொடர்ச்சி 41ஆம் பக்கம்**

# ஒரு தமிழ்ப் பேராசிரியரின் "கலசம்" பார்வையில்

ஐயா வணக்கம்.
இலங்கையில் மே மாதம் 15 முதல் 20 வரை நடைபெற்ற பன்னாட்டு ஆய்வு மாநாட்டில் நெல்லையில் இருந்து நானும் என் துணைவியார் முனைவர் சே உமய பார்வதியும் வந்திருந்தோம். தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களில் இருந்து மொத்தம் 60 பேர் கலந்துகொண்டோம்.

அரசு ஆசிரியர் கலாசாலையில் சுவாமி விபுலானந்த அடிகள் அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கில் அமர்வுத் தலைவராகப் பங்குபெற்றேன். "பழமொழிகளில் பண்பாட்டுப் பதிவுகள்" என்ற பொருளில் கட்டுரை வழங்கினேன்

வந்திருந்த எங்களை மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கமும் தமிழ்ச் சங்கமும் இணைந்து மாலை மரியாதை, மேளதாளத்தோடு வாசலில் இருந்து வரவேற்று அழைத்துச் சென்றார்கள். சிற்றுண்டி கொடுத்து அத்தோடு "கலசம்" இதழையும் கையில் கொடுத்தார்கள். மகிழ்ச்சி. வாழ்க்கையில் இந்த இதழை முதன்முதலில் தொடும் பாக்கியம் கிடைத்திருக்கிறது.

தங்கள் இதழில் தரமான தார்மீகமான பொருளடக்கம் கண்டேன். படித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய பத்திரிகை இதுவாகும். இதில் இடம்பெற்றுள்ள ஆன்மிகச் செய்திகளும் திருக்குறள் கதைகளும் எங்களை வெகுவாகக் கவர்ந்தன. வரும் காலங்களில் நானும் தங்கள் இதழுக்குக் கட்டுரை அனுப்புகிறேன். வெளியிட்டு உதவுங்கள். இதழ் ஆசிரியருக்கும் வெளியீட்டாளர்களுக்கும் வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன்,
பேராசிரியர் முனைவர் வ. ஹரிஹரன்
தமிழ்த்துறைத் தலைவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி
மேலநீலிதநல்லூர் 627 953
தென்காசி மாவட்டம்



# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com



உ

# சிவயோகம்
# SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்
## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்
128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் “சிவயோகம்” அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் **Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS**

நன்றி

**ஆலய நிர்வாகத்தினர்**

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்க

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்
பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும்
உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

## அன்னதானம் செய்யலாம்...

உங்களின் £100 பங்களிப்பு
பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....
இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு
உதவுவதற்கு தாயாராக இருக்கின்றோம்.
(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின
புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

on Your Birthday, Wedding Day
Remembrance Day
or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்**

**Please donate as much as you can!**


SVR
Sangeetha
சங்கீதா
Indian Vegetarian Restaurant
GRAND
INAUGURAL
OFFER
50%
OFF
செவிக்குச் சுவை சங்கீதம்
வயிற்றுக்குச் சுவை சங்கீதா.
278 High Street North
Manor Park
London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஜூலை (16-07-2024) தொடக்கம் செப்டெம்பர் (29-09-2024) வரை

| | | |
|---|---|---|
| 16.07.2024 | செவ்வாய் | ஆடிப்பிறப்பு |
| 18.07.2024 | வியாழன் | பிரதோஷம் |
| 21.07.2024 | ஞாயிறு | ஸ்ரீ காயத்திரி ஹோமம் |
| 01.08.2024 | வியாழன் | பிரதோஷம் |
| 03.08.2024 | சனி | ஆடி அமாவாசை |
| 07.08.2024 | புதன் | ஆடிப்பூரம் |
| 11.08.2024 | ஞாயிறு | சுந்தரர் குருபூசை |
| 16.08.2024 | வெள்ளி | வரலட்சுமி விரதம் |
| 17.08.2024 | சனி | பிரதோஷம் |
| 31.08.2024 | சனி | பிரதோஷம் |
| 06.09.2024 | வெள்ளி | விநாயகர் சதுர்த்தி |
| 15.09.2024 | ஞாயிறு | பிரதோஷம் |
| 16.09.2024 | திங்கள் | நடேசர் அபிஷேகம் |
| 29.09.2024 | ஞாயிறு | பிரதோஷம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | |
|---|---|---|---|---|
| Title | | Home Phone | | |
| First Name | | Mobile No | | |
| Surname | | Email ID | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | |
| Post code | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# சொல்லும் நயம்

ஞாலக்கோன்

திருத்தொண்டர் புராணத்தைச் சிலர் ஒதுக்கி வைக்கிறார்கள். அதற்கு, சமய சம்பந்தமானது; புனைகதைகளைக் கொண்டது எனப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதனால் அதிலுள்ள இலக்கியச் சுவையை அநுபவிக்க அவர்கள் தவறிவிடுகிறார்கள். பக்தி இலக்கியம் என்று அதைப் பார்க்காது மற்றைய இலக்கியங்களைப்போல அதைப் பார்த்தால் அதன் சுவையை அவர்களாலும் அநுபவிக்க முடியும். ஒதுக்கி வைப்பதால் அதன் சுவையையும், சுவைப்பதால் வரும் நல்லதோர் அநுபவத்தையும் அவர்கள் இழந்துவிடுகிறார்கள். ஆன்மிகவாதிகளோ அதிலுள்ள கவித்துவத்தையும் பத்திச் சுவையையும் படித்துப் படித்து இன்புறுகின்றார்கள்.

பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தை ஆக்கியவர் தெய்வப்புலவர் சேக்கிழார். அவரின் கவிநயம் படிப்போரைப் பிரமிக்கவைக்க வல்லது. பல இடங்களில் சம்பவங்களை அவர் சொல்லும் விதம் பரவசப்படுத்தும். அமங்கலமான சம்பவத்தையும் மங்கலமான சொற்களைப் பயன்படுத்தி அமைத்திருப்பார். அந்நாளில் இருந்த கலாசார ஒழுங்கு, செயற்பாட்டு மரபுகள், நீதி - நேர்மை போன்றவற்றை அழகாகச் சொல்வதை ஆங்காங்கே பார்க்க முடியும். பானை சோறானாலும் பதம் பார்ப்பது பருக்கை ஒன்றைத்தான். இங்கே சில சோற்றவிழ்களைப் பார்க்கலாம்.

தாமன் என்பவருக்கு ஏழு பெண்கள். தன் பெண்ணை மணம் முடித்துவைக்கிறேன் என்று முறை மாமனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு வேறு வரன்களுக்கு ஒவ்வொருவராகத் திருமணம் செய்து விடுகிறான். கடைசி மகளுக்கு இது பிடிக்காததால் மாமனுடன் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். நடந்து வெகுதூரம் சென்று இரவு ஒரு இடத்திலே தங்குகிறார்கள். இரவு மாமன் அரவந்தீண்டி இறந்துவிடுகிறான். உள்ளூர் மருத்துவர்கள், மந்திரவாதிகள் எவராலும் குணப்படுத்த முடியவில்லை. அவள் அழுகிறாள். பின்னர், அங்குவந்த திருஞானசம்பந்தர் அருளால் இறந்தவன் உயிர் பிழைத்ததும் திருமருகல் கோயிலில் சம்பந்தர் அவர்களுக்கு மணம் முடித்துவைத்ததும் நடந்த கதை.

திருமணம் ஆகாத ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் தீண்டுவது வழக்கமில்லை. மணம் முடிக்க முடிவு செய்திருந்தாலும், இருவரும் தனித்தனியேதான் தங்கினார்கள். அரவம் தீண்டினாலும் அவனை அவள் தீண்டவில்லை. இறந்த பின்னருங்கூட அவனைத் தீண்டாமலே அவள் அழுகிறாள். இந்தக் காட்சியை:

வாளரவு தீண்டவுந்தான் **தீண்டகில்லாள்**
　　மறுமாற்றம் மற்றொருவர் கொடுப்பா ரின்றி
ஆளரியே றனையானை **அணுக வீழ்ந்தே**
　　அசைந்தமலர்க் கொடிபோல்வாள் அரற்றும் போது
கோளுருமும் புள்ளரசும் அனையார் எல்லாக்
　　கொள்கையினா லுந்தீர்க்கக் குறையா தாக. -
நீள்இரவு புனர்காலை மாலை வாச
　　நெறிகுழலாள் நெடிதயிர்ந்து புலம்புகின்றாள்

என்று வரைகின்றார் சேக்கிழார். வாளரவம் தீண்டவுந்தான் தீண்டகில்லாள், கொடிய பாம்பு தீண்டி

அவன் உயிரிழந்துவிட்டான். ஆனால் அவன் இறந்தபின்னும் அவன் உடம்பை (திருமணம் ஆகாத காரணத்தால்) அவள் தீண்டினாளில்லை. அதனால் அந்த உடலின் பக்கத்தில் வீழ்ந்து அழுகிறாள். “அணுகவீழ்ந்தே ..... அரற்றும்போது,” என்ற தொடரைச் சேக்கிர் பெருமான் பயன்படுத்துகிறார். இத்தொடர்கள் அக்காலத்துப் பண்பையும் மரபையும் படம்பிடித்துக் காட்டி நிற்கின்றன.

திலகவதியாருக்குத் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. அரசனின் ஆணைப்படி கலிப்பகையார் (திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்டவர்) போருக்குச் செல்கிறார். அங்கே வீரமரணம் அடைகிறார். அந்தச் செய்தியை அறிகிறார் திலகவதியார்.

வெம்முனைமேற் கலிப்பகையார் வேல்வேந்தன் ஏவப்போய்
அம்முனையில் பகைமுருக்கி அமருலகம் ஆள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த **பெருவார்த்தை** தலஞ்சாற்றச்
செம்மலர்மேல் திருவனைய திலகவதி யார்கேட்டார்

வேந்தனுடைய ஆணைப்படி, போர்முனைக்குச் சென்ற கலிப்பகையார், பகைவர்களை முருக்கி (அழித்து) தன்னுடைய கடனை முடித்தபின் அமர் உலகம் ஆளச் சென்றுவிட்டார். வீரமரணம் அடைந்தார் என்பதை அமருலகம் ஆளச்சென்றார் என்கிறார் சேக்கிழார். அவர் அமரரான செய்தியை, “பெருவார்த்தை”யை ஊரார் சொல்ல, திலகவதியார் கேட்டார். பெருவார்த்தை இறந்துபட்டமையைக் குறிப்பிடும் மங்கலச் சொல்.

மெய்ப்பொருள் நாயனார் மிகுந்த சிவபத்தி உடையவர். சிவனடியார்களைப் பேணுபவர். பகைவர்களைத் தன் தோள்வலியால் வென்றவர். தனது நாட்டு மக்களைப் பாதுகாப்பவர். முத்தநாதன் என்ற அயலூர் அரசன் பலமுறை போர் தொடுத்தும் மெய்ப்பொருளை வெல்ல அவனால் முடியவில்லை. எனவே தந்திரத்தால் அவரை வெல்ல நினைக்கிறான். சிவன டியார்களை வணங்கி மிகவும் போஷிப்பவர் அவர் என்பதை அவன் அறிவான். எனவே சிவனடியார் வேடத்தில் அவன் செல்கிறான். கையிலே புத்தகம் போலொரு பெட்டியில் உடைவாளை மறைத்துவைத்து எடுத்துச் செல்கிறான். காவலாளர் அனைவரும் அரசனைப் பார்க்க வந்த சிவனடியார் என்று கருதி அவனைத் தடுக்கவில்லை. மன்னன் துயிலும் அறைக்குள்ளேயே அவன் நுழைய அவனின் சிவவேடம் உதவியது. மன்னனின் மனைவி மன்னனைத் துயிலெழுப்ப, அடியவர் ஒருவர் தன்முன் நிற்பதைப் பார்த்த மன்னன் அவரின் வருகைக்குக் காரணம் கேட்கிறான். “கிடைத்தற்கரிய சைவநூல் ஒன்று எனக்குக் கிடைத்தது. அதிலுள்ளவற்றை உனக்கு எடுத்துச் சொல்லவே வந்தேன்” என்று சொல்லி, மனைவியாரை வெளியே போகும்படி சொல்லவும் கேட்கிறான். மன்னனும் அவ்வாறே செய்து, முத்தநாதன் முன்னால் மண்டியிட்டு வணங்குகிறான். அப்போது பெட்டியைத் திறந்து வாளை எடுத்து மெய்ப்பொருளைக் கொல்கிறான் முத்தநாதன். திட்மிட்டுச் செய்த கொடுஞ்செயல் செயல் அது. இதை,

கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பார் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் **தான்முன் நினைத்தவப் பரிசே செய்ய**
மெய்த்தவ வேடமே மெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்

என்று விவரிக்கிறார் சேக்கிழார். கொன்றான் எனச் சொல்லாது, “தான்முன் நினைத்த அப் பரிசே செய்ய” என்று பதிவு செய்கிறார். ஆனால் இந்த வஞ்சகச் செயலிலும் வென்றவர் மெய்ப்பொருள் என்கிறார் சேக்கிழார் பெருமான்.

மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியால் வென்று விடல். குறள்: *158*

செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரை, தாம் தம் பொறுமைப் பண்பினால் வென்றுவிடல் வேண்டும். மெய்ப்பொருள் இந்தக் குறள் கூறும் இலக்கணத்துக்கு இலக்கியம் ஆகிறார்.

திருநாவுக்கரசரின் தொண்டு பற்றிக் கேள்வியுற்ற அப்பூதியடிகள் அப்பர் மீது அளவுகடந்த பத்தி உடையவர் ஆகின்றார். அந்தப் பத்தியினாலும் அன்பினாலும் தன் பிள்ளைகள், தனது மடம், தண்ணீர்ப்பந்தல், உடைமைகள் எல்லாவற்றுக்கும் திருநாவுக்கரசு என்று பெயர்வைத்து வாழ்ந்து வருகிறார். இத்தனைக்கும் அவர் அப்பரை நேரிலே பார்த்ததில்லை. தலயாத்திரை செய்து வருகின்ற திருநாவுக்கரசர், திருப்பழனம் சென்றபின் திங்களூருக்கு வருகிறார். வழியில் அழகான தண்ணீர்ப்பந்தல் ஒன்று இருக்கிறது. களைத்து வருவோருக்குக் குளிர்ந்த நீர் கொடுத்து ஆசுவாசப்படுத்தும் இடமாக உள்ளமை அவரை வியப்பில் ஆழ்த்துகிறது. அந்தப் பந்தலில் திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் என்று எழுதியுள்ளது கண்டு, ஊரவரிடம் விசாரிக்கிறார், ஊரவர்கள் அப்பூதியாரைப் பற்றிச் சொல்கிறார்கள். அப்பூதியாரின் பெருமையைக் கேள்விப்பட்ட அப்பர் அவரைச் சந்திக்க ஆவல் கொள்கிறார்; அவரின் மனைக்குச் செல்கிறார். அங்கே வந்தவர் யாரென்றே தெரியாமல் ஒரு சிவனடியார் வந்துள்ளார் என்ற மகிழ்வுடன் வந்தவரை வரவேற்கிறார் அப்பூதி.

"தங்கள் தொண்டுகள் எல்லாவற்றையும் திருநாவுக்கரசர் என்ற பெயரிலேயே செய்கின்றீர்களே! உங்கள் பெயரை வைத்திருக்கலாமே!" என்ற அப்பரின் கேள்வி அப்பூதியாரை அசர வைக்கிறது. "நின்ற மறையோர் கேளா நிலையழிந்த சிந்தையராய்" நிற்கும் அப்பூதியடிகள் அப்பரடிகள் யாரென்றே தெரியாத நிலையில், அப்பரின் சிவவேடத்துக்கு மதிப்பளித்து, "சமணத்திலிருந்து சைவத்துக்கு வந்ததால், சமணர் கல்லுடன் கட்டிக் கடலுள் போட, மிதந்து வந்த அந்தப் பெரியவரைப்பற்றி தெரியாதா? உலகமே அறியுமே! அது தெரியாத நீவிர் யார்?" என்று கேட்கிறார். அதற்கு அப்பர், "சூலை நோய் கொடுத்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அடியேன் நான்" என்கிறார். அதைக் கேட்ட மாத்திரத்தில் அப்பூதியார் தன் பிறப்பின் பயனை அடைந்ததாக உணர்ந்து, அப்பரின் காலில் வீழ்ந்து வணங்கி, அன்புறு சிந்தையராய், அவரை வீட்டுக்கு அழைக்கிறார்; விருந்து கொடுக்க ஏற்பாடு செய்கிறார். உணவு கொடுப்பதற்கு வாழையிலை அரியப்போன மூத்த மைந்தன் அரவம் தீண்டியபோதும் விரைவாக வந்து தாயிடம் இலையைக் கொடுத்தபின் உயிர்விடுகிறான். அதை அப்பரிடம் தெரிவிக்காமல் அப்பூதியாரும் அவர் மனைவியாரும் விருந்து பரிமாறுகிறார்கள். உணவு அருந்துமுன் அனைவருக்கும் விபூதி கொடுத்த அப்பர் மூத்த மகனையும் அழையுங்கள் என்றபோது, என்றுமே பொய் சொல்லாத அப்பூதி சொல்லும் பதிலை அழகாக அமைத்துள்ளார் சேக்கிழார்.

ஆதிநான் மறைநூன் வாய்மை அப்பூதி யாரை நோக்கி
காதலால் இவர்க்கு மூத்த சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதிசாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதும்ஒன் றுரையார் **இப்போ திங்கவன் உதவான்** என்றார்

என்றைக்குமே உண்மையே பேசும் அப்பூதியார், நடந்ததைச் சொன்னால் அடிகள் அமுதுசெய்வது தடையாகுமே என்று எண்ணுகிறார். அவர் சிந்திக்கிறார். தனது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான சிவனடியார் முதன்முதல் வந்திருக்கிறார். உண்மையைச் சொன்னால்

அவருக்கு உணவளித்து விருந்தோம்பும் பாக்கியம் கிடைக்காது. பொய் சொல்லக் கூடாது, ஆனால் உண்மையை முழுதுமாகக் கூறாமல் விடலாம் அல்லவா? சிந்திக்கிறார் அப்பூதியார். அதனால், அவர் "யாதும் ஒன்றுரையார், இப்போது இங்கவன் உதவான்" என்கிறார். என்னே சேக்கிழாரின் கவித்துவம்.

பின்னர் அப்பரின் சந்தேகத்தால் வேறு வழியின்றி முழு விவரத்தையும் சொல்ல அப்பூதியார் நிர்ப்பந்திக்கப்படுகிறார். மகனின் உடலைக் கொண்டுவரச்செய்து, அப்பரடிகள் "ஒன்று கொலாம் அவர்" என்ற பதிகம் பாடி சிறுவனை உயிர்ப்பித்தது நாம் அறிந்த வரலாறு.

சேக்கிழார் பெருமான் பயன்படுத்தும் சொல்லும் (சொற்களும்) நயம், அவர் சொல்லும் (விதமும்) நயம். பெரியபுராணத்திலே இப்படி மேலும் பல இடங்களில் சேக்கிழார் பெருமானின் கவித்துவத்தைப் படித்தின்புறலாம்; இன்புறுவோம்.

நன்றி: பன்னிரு திருமுறை மின்னம்பலம்
திருத்தொண்டர் புராணம், சிவக்கணிமணி C K சுப்பிரமணிய முதலியார் உரையுடன், சேக்கிழார் நிலையம்.

---

**Continued from page 12.....**

There are recent phases in the evolution of man which tend to make the world good, pointing to the goal of goodness, truth and bliss.

Social evolution also marches in the same direction. The individual sacrifices his interests for the welfare of the group, which in turn, sacifices itself for the whole society. Selfless co-operation is gaining ground and will eventually dominates the world. This will be the basis of universal goodness which appears to be the very goal of evolution. If we admit this, we must postulate some factor or power that causes this purposeful evolution of the universe towards goodness. This power must be an all pervading one and can be identified with the power which we call religion (or Tharma). The third function of the power is thus the evolution of the universe as a whole.

**The Relation to Conventional Religions**

Religion raises different souls to different heights. These heights are really the heights of Truth, Goodness and Bliss and will have to be measured in terms of these. Some animals and human beings identify themselves with with their individuality (selfish). They identify with their own body, mind and intelect and ego. There are some people who identify themselves with other people , who may be called altruists (unselfish). Some transcend all these and find a unity in the whole universe (selfless). Hence, religions have different effect on these different people.

The next issue will explore the fourfold knowledge, Agents of religion and the Saiva view of religion.

(To be continued)

# தேவார மூவருக்கு முன்
# சைவத் தொண்டு

திரு க செல்வரத்தினம்

தமிழ் மொழியும் சைவ சமயமும் ஆதியானவை. மனித வாழ்க்கைக்குத் தேவையான நெறி முறைகளும் தத்துவங்களும் எம்மதத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன. எம்மை ஆண்டுவந்த அரச பரம்பரையினரை ஐரோப்பிய ஆட்சியாளர்கள் சிறைப்பிடித்து, அடங்காமல் இருந்தோரை அழித்தனர். சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டன. ஆனால் சுழல் சக்கரம் போல ஐரோப்பிய தலை நகரங்களில் பிற வழிபாட்டுத் தலங்கள் இந்துக் கோயில்களாக மாறுகின்றன. சைவசமயத்தைக் காப்பாற்றுவதில் “கலசம்” ஐக்கிய இராய்ச்சியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

சைவசமயத் தோத்திரங்கள் சிவப்பரம்பொருளைக் குறித்து பாமாலைகளாக உள்ளன. பெரிய புராணம் அடியவர்களைப் போற்றிய பெருங்காப்பியமாக அமைக்கப்பட்டுள்ளது. சேக்கிழார் பெரியபுராணத்தின்படி, சமய மறுமலர்ச்சி அப்பர், திருஞானசம்பந்தர் காலத்தில் இருந்து எழுச்சி பெற்றுள்ளது என்று தெரிகிறது. எனினும் இவர்கள் இருவருக்கு முன்பும் நாயன்மார் பலர் வாழ்ந்து சைவசமயத்திற்கு பெருந்தொண்டாற்றியுள்ளனர்.

63 நாயன்மார்கள் பக்தி நெறியில் வாழ்ந்து காட்டிச்சென்றுள்ளனர். பெரியபுராணத்தில் சம்பந்தர், அப்பருக்கு முன் வாழ்ந்த சில நாயன்மார்கள் செய்த தொண்டுகளை மதிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்”

- குறள் 50

வாழவேண்டிய முறைப்படி உலகத்திலே செம்மையாக வாழ்பவன் வானத்திலிருக்கும் தெய்வங்களுள் ஒன்றாகவே உயர்த்தி வைக்கப்படுவான். சேக்கிழார் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் போன்ற நூல்களிற் சொல்லப்பட்டவற்றைத் தமது ஆக்கத்தில் சேர்த்துள்ளார். அன்பு என்பது ஆண்டவனிடம் மட்டும் வைப்பது அன்று. உலகத்து உயிர்கள் மேலெல்லாம் செலுத்தப்படவேண்டியது எனக்காட்டப்பட்டுள்ளது. நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் இதைக் காட்டி நிற்கின்றன. சிவனார் பற்றிய சிந்தை ஒழிய வேறு சிந்தனை இல்லை என வியக்கிறோம். மூவருக்கு முற்காலத்தவர்கள்:


1. திருமூலர் 2. கோச்செங்கட்சோழர் 3. புகழ்ச்சோழர் 4. சண்டேசுவரர்
5. கண்ணப்பர் 6. காரைக்கால் அம்மையார் 7. மூர்த்தி நாயனார் 8. கூற்றுவ நாயனார்
9. ஐயடிகள் காடவர் கோன் 10. கணம் புல்லர் 11. நமிநந்தி அடிகள்
12. எறிபத்தர் 13. சாக்கிய நாயனார் 14. எறிபத்தர் 15. அமர்நீதி நாயனார்
16. புகழ்த்துணை நாயனார் எனப் பலர்.

ஏனைய நாயன்மார்களை விட இவர்களே சைவ மறுமலர்ச்சிக்கும் பல புறச்சமய இன்னல்களுக்கிடையே சமுதாய மறுமலர்ச்சிக்கும் வித்தூன்றியவர்கள் ஆவர். அப்பர், திரு ஞானசம்பந்தர் இவர்களோடு, பின்னர் சுந்தரரும் தோன்றி எழுச்சியைப் புதியதோர் உச்சத்திற்கு எடுத்துச் சென்றனர்.

1. திருமூலர்:

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பர் தொல்காப்பியர். 28 பாடல்களில் சேக்கிழார் பெருமான் திருமூலரை விளக்குகின்றார். சுந்தரர் என்னும் இயற்பெயர் கொண்ட திருமூலர் நந்தி எம்பெருமானிடம் மெய்ப்பொருள் கற்றவர். காவிரிக்கரையில் மாண்டு கிடந்த மூலன் என்னும் இடையனைச் சுற்றிப் பசுக்கள் கதறி இரங்கின. பசுக்களின் துயரைப் போக்க, இறந்த மூலன் உடலுக்குள் திருமூலர் புகுந்ததும் மூலன் உயிர்பெற்றான். எனினும் அரசமர நிழலில் சிவயோகம் கூடி 3000 பாடல்களைப் பாடிச் சாத்திரமாகவும், தோத்திரமாகவும் திருமந்திரம் தந்துள்ளார்.



பட்டிப் பசுக்கள் இருபத்து நால்உள
குட்டிப் பசுக்களோர் ஏழ்உள ஐந்துள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவதற்கு வாய்த்ததே. - 2874

திருமூலர் திருவாவடுதுறைக் கோயிலை அடைந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிப்படிகளை வகுத்து ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனச் சுருங்கக் கூறி விளக்கியுள்ளார்.

இந்நூல் தந்திரம், மந்திரம், இயந்திரம் எனும் மூன்று நிலைகளில் உள்ளது. திருமந்திரத்தில் ஒன்பது பிரிவுகளும் ஒன்பது ஆகம வழி அருளப் பெற்றன. எம்மில் உள்ள ஐந்து புலன்களை இறையருளால் அடக்கி ஆளும் ஆன்மா சிவஞானப்பால் அருந்தும் என்றும், அத்தகைய திறன் இல்லா ஆன்மா துன்புறும் எனவும் கூறப்பட்டுள்ளது. திருமந்திரம் தமிழ், சைவ உலகின் மும்மைக்கும் பலப்பல நலன் பயக்கும் சைவத்தின் மூல பண்டாரமாகும்.

2. மூர்த்தி நாயனார்:

முத்தமிழ் வளர்த்த மதுரை நகரத்தில் சந்தனக் காப்பு அணிவித்து வருதல் இவரது பணியாகும். கொடுங்கோல் மன்னன் சட்டத்தால் திருச்சந்தனம் கிடைக்காது கோயில் திரும்பினார். கல்லில் முழங்கையைத் தேய்த்தார். சதை பிய்ந்தது. எலும்பு தனியே தேய்ந்தது. திருவருளின்படி மன்னன் ஆவிதுறக்க, பட்டத்துயானை இவரை மன்னனாக்க அரண்மனைக்கு அழைத்து வந்தது. சபையோர் கூடி இவரை ஏற்றுக் கொண்டனர்.

வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமும்ஆக செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமும்ஆக, அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவது என்றார்.
- மூர்த்தி நாயனார் புராணம் 41

சமணம் மறைய, சைவம் தழைத்ததால் நன்னீறு தழைத்தது. உருத்திராக்கமும், திருநீறும், சடைமுடியும் என இறை அடையாளங்களை ஏற்றுக்கொண்டு நல்லாட்சி செய்து நம்பெருமான் அடி அமர்ந்தார்.

3. சண்டேசுவரர்

சோழவள நாட்டில் சேய்தலூரில் அந்தணர் குலத்தில் எச்சதத்தனும் பவித்திரையும் இணைந்து பெற்றனர். குழந்தைக்கு விசாரசர்மர் என நாமம் சூட்டினர். முற்பிறவிப் பயனால் அளவற்ற கலைகள் பயின்றான். சிறுவனின் சிந்தை முழுவதும் சிவநெறி நிறைந்தது. விளையாடச் சென்றான். வழியில் பசுவொன்று இடையனை முட்டியது. இடையன் அப்பசுவைக் கோலால் அடித்தான் . பாய்ந்து தடுத்தான் சிறுவன் விசாரசர்மர். ஆனிரை காத்தல் அம்பலக்கூத்தன் அடியேற்றல் என்று வாழ்ந்து வந்தான். தானே பசுக்களை மேய்க்கத் தொடங்கினான் பாலகன்.

ஆற்று மணலில் லிங்கம் அமைத்து மலர்கள் சூட்டினார். அயலான் ஒருவன் விசாரசர்மன் தந்தையிடம் தகாது கூறி பாலெல்லாம் வீணாக்குவதாக கோள் சொன்னான். தந்தையும் அதை நம்பி மகனைக் கோலால் அடித்தும், நிரம்பி இருந்த பால் கலசங்களைக் காலால் தட்டி வீணாக்கியதை உணர்ந்த பாலகன் கோலால் தந்தையின் காலில் அடிக்க ஓங்கியபோது, கோல் மழுவாக மாற, கால் வெட்டுண்டு தரையில் சாய்ந்தார் எச்சதத்தன். அப்போது தோன்றிய இறைவன் விசாரசருமருக்கு அருள்செய்து சண்டேசப் பதவி அளித்தருளினான்.

4. கண்ணப்பர்

ஆந்திர மாநிலத்து காட்டூரில் வேடுவர் குடும்பத்தில் தலைவனான "நாகன்", தத்தை என்பவளை தளிர்க்கரம் பிடித்து, தம்பதியினருக்கு மகன் பிறந்தான். பிள்ளைக்குத் "திண்ணன்" எனப் பெயர் சூட்டினர். வில்லும், வாளும் பயின்றான். நாணனும், காடனும் உதவத் திண்ணன் வேட்டையாடச் சென்றான். திருக்காளத்திமலை நோக்கி நடந்தனர். திண்ணனுக்கு திருவருள் கைகூடியது. ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்யும் முற்பிறப்பின் பலனாக காளத்தி நாதரை அன்பால் வழிபட்டான். "இறைவா! உன் பசிக்கு உணவு படைப்பேன்" என்று காட்டுக்குள் சென்றான். திரும்பி வந்து அபிடேகம் செய்து வேட்டையாடிய பன்றியின் இறைச்சியும் படைத்தான். சிவகோசரியார் வந்து இறைச்சி, எலும்பைக் கண்டு கோபம் கொண்டார். இடத்தை சுத்தம் செய்தார். "யார் இந்த அபசாரத்தைச் செய்திருப்பார்" எனக் கவலை கொண்டார். சிவகோசரியார் கனவில் வந்தார் சிவன். "வேடுவன் செயல் அனைத்தும் அன்பின் செயலே. நாளை ஒளித்திருந்து காண்பாய்!" என்றார். கனவு கலைந்து கண்விழித்தார் சிவகோசரியார். காலையில் அங்கு சென்று மறைந்திருந்தார். முப்புரம் எரித்தோன் தன் வலக்கண்ணில் குருதி வடியச் செய்தார், விம்மி அழுதான் திண்ணன். ஊனுக்கு ஊனே உற்ற மருந்தென தன் விழி தோண்டி, செந்நீர் வடியும் கண்ணில் அழுத்தினான். குருதி நின்றது. தொடர்ந்து இடக்கண்ணில் குருதி வழிந்தது. கண்ணுக்குக் கண் எனத் தெரிந்ததால் தனது இடது கண்ணைத் தொண்ட நினைத்து, இடது கண்ணையும் தோண்டினால், பார்வை போய்விடும், கண் எங்கே வைப்பது என்று தெரியாதே என்று சிந்தித்துத் தனது காலூன்றி, அம்பால் ஆழத்தோண்ட முயன்றான் திண்ணன். திண்ணனின் கையைப்பிடித்து "கண்ணப்பா நில்" என்று அருளினார் சிவபெருமான். நான் மறைகள் முழங்கின. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். திண்ணன் கண்ணப்பர் ஆனார். இறைவன் அருட்காட்சி தந்து ஆட்கொண்டார்.

5. காரைக்கால் அம்மையார்

சங்க காலத்தில் கவிதை எழுதும் மகளிர் பலர் இருந்தனர். புனிதவதி என்ற காரைக்காலம்மையார் தோன்றினார். அதைத் தொடர்ந்து ஆண்டாளும் சிறந்து விளங்கினார். வணிகர் குலத்தவனான பரமதத்தன் புனிதவதியாரை மணம் செய்து வாழ்கையில், தனக்குக் கிடைத்த இரு மாங்கனி களை, உதவியாளன் மூலம் மனையாளிடம் கொடுத்தனுப்பினார். அப்போது அமுதுண்ண ஓர் அடியார் வர, அதில் ஒரு கனியை அடியவருக்கு விருந்துபசாரப் பண்பாக எண்ணிப் புனிதவ தியார் கொடுத்தார். ஆனால் அதைக் கணவனிடம் கூறவில்லை. வீட்டுக்கு வந்த கணவனுக்கு

மற்றைய மாங்கனியை புனிதவதியார் கொடுத்தார். அருஞ்சுவையாக அது இருந்ததால், மற்றைய கனியையும், மனையாளும் உண்ணத் தேவையென உணராது தனக்குத் தரும்படி கேட்டான். மற்ற மாங்கனியையும் கேட்க, பக்தி வல்லைமையால் நேர்த்தியான மாங்கனியை அவனிடம் கொடுத்தாள். முதற் கொடுத்த கனியைவிட இது சுவையாக இருந்ததால் விவரம் கேட்டான். உண்மை சொன்ன மனைவியை நம்பாது, அப்படியானால் இன்னொருமுறை எடுத்துக்காட்டு என்றான் அவன். மீண்டும் ஒரு கனி அம்மையாரின் கையில் தோன்றியது. ஆனால் அவன் கைக்குப் போகுமுன் மறைந்தது. இவள் தெய்விகமானவள் என்று நினைத்து, அவளை நீங்கி, வேறு ஊர்சென்று வாணிபம் செய்வதாகக் கூறி, மறுமணம் செய்து மகள் ஒன்றும் பெற்று புனிதவதி எனப் பெயர் சூட்டி வாழலானான். இவள் மனிதப் பிறவியல்லள்; தெய்வப்பிறவி எனக் கூறினான். கணவனை மீண்டும் அடைய முயன்ற புனிதவதி அது நிகழாமையால், இளமை துறந்து, பேய் வடிவம் கொண்டு, கயிலை சென்ற போது “அம்மையே!” என இறைவன் அழைத்தார். புனிதவதியும் நினது ஆனந்த நடனம் காண விரும்புகிறேன் எனத் திருவாலங்காட்டில் ஆடல்காட்சி கண்டு ஆடினார், பாடினார். அறுபத்து மூவரில் இருக்கும் கோலத்தில் உள்ள ஒரேயொரு அடியார் காரைக்கால் அம்மையார். ஏனையோர் நின்ற கோலத்தில் காணப்படுகின்றனர்.

அம்மையார் அருளிய பாடல்கள்:
திருவாலங்காட்டு பதிகம் 1
திருவாலங்காட்டு பதிகம் 2
திருவிரட்டை மணிமாலை
அற்புதத்திருவந்தாதி என மொத்தம் 142 பாடல்கள்.


காரைக்கால் அம்மையார்

6. எறிபத்தர்

இவர் காலத்தில் சமணர், பௌத்தர் தமிழ் நாட்டை ஆக்கிரமித்தனர். கோயில்களுக்கு பல இடையூறுகள் செய்தனர். முதியவரின் பூக்கூடையை பட்டத்து யானை கீழே தள்ளுகிறது. புறச்சமயியின் இழிசெயல் என யானையை வெட்டிக்கொல்கின்றார். இதை அறிந்த சோழன் தன்னையும் வெட்டுமாறு பணிவாக வேண்டினான். தன்னையே மாய்த்துக்கொள்ள எறிபத்தர் வேண்டுகிறார்.

7. தண்டியடிகள்

இவர் பிறவிக்குருடர். குளம் தூர் எடுத்து, நீரைச் சேமிக்க விரும்பினார். கண்ணும் குருடு என இவரைச் சமணர் ஏளனம் செய்தனர். அவர் குருடராகியும், சமணம் இல்லாமல் போகவும் தண்டியடிகள் சாதித்துக் காட்டினார். சமணர் ஆதிக்கத்தை அகற்றியவர்.

8. சாக்கிய நாயனார்

காஞ்சியை அடுத்த திருச்சாத்தமங்கையில் வேளாளர் குடியில் தோன்றினார். புத்த மதத்தவர். சிவனின் திருவருள் கூடியது. பொன்னம்பலத்தானை வணங்கினார். அருவுருவமாம் சிவலிங்கத்தை சிந்தித்த பின்பே உணவு அருந்துபவர். வெட்ட வெளியில் சிவலிங்கம் கண்டார். அர்ச்சனைப் பொருள் அகப்படவில்லை. அம்மை அப்பன் மீது கல்லை எறிந்தார். இதுவே அர்ச்சனைப் பொருள் என உணர்ந்து அன்றாடம் தொடர்ந்தார். இறைவன் சாக்கியரைத் தன் சந்நிதிக்கு அழைத்துச் சேர்த்தார்.

அப்பர் பெருமான், திருஞானசம்பந்த சுவாமிகள், சுந்தரர் ஆகிய மூவரும் மேலும் சைவசமய விருத்திக்கு முன்னின்று உழைத்தவர்களே. முற்பட்ட நாயன்மார்கள் வழிகாட்டிகளாய் உதவினர் எனலாம்.



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## இல்வாழ்க்கை
## Family Life

*அதிகாரம்: 5* *குறள்: 45*
**Chapter: 5** **Kural: 45**

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

Meaning: If the married life possesses love and virtue, these will be both its duty and reward

பொருள்: கணவன் மனைவியருக்குள் அன்பும், பிணைப்பும் அறநெறிப்படியே நிகழ்ந்து வருவதும் உடையதானால், இல்வாழ்க்கை என்பது பண்பும் பயனும் உடையதாக மிளிரும்.

இராமாயண காவியத்தில், இராமனுடைய தம்பியாகிய பரதன், திருமணம் முடிந்த அன்றே தன் மனைவியிடம்:

"மாண்டவி! கணவன் மனைவி என்பதைவிட, நாம் நல்ல நண்பர்களாக நட்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். மரியாதை என்பதைவிட, அன்பு மட்டுமே நமக்குள் நிறைந்திருக்க வேண்டும். நீ என் தோழி."
என்று கூறினான்.

அந்த நிமிடமே மாண்டவி பரதனைத் தன் மனம் முழுவதும் நிறைத்துக் கொண்டாள். மனை வியைத் தோழியாக நினைப்பவன் என்றும் அவள் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பான் என்றும் புரிந்து கொண்டாள்.

இராமன் வனவாசம் சென்ற பிறகு, அரச பதவியை உதறி, அண்ணன் இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்துவரப் புறப்படுகிறான் பரதன். அதை மாண்டவியிடம் தெரிவித்து, "என் அண்ணன் இல்லாமல் நான் அயோத்திக்குத் திரும்பமாட்டேன். என் வாழ்க்கையில் நீ என் சரி பாதி. இது பற்றி உனது கருத்தை அறிய விரும்புகிறேன்" என்றான்.

"அரசே! நீங்கள் எடுக்கும் எந்த முடிவுக்கும் நான் உடன்படுகிறேன். முன்னையும் விட இப்போது என் இதயத்தில் இன்னும் நெருக்கமாகி விட்டீர்கள்" என்று மாண்டவி மகிழ்ச்சியுடன் கூறினாள்.

தந்தையின் வாக்கைக் காப்பாற்ற வனவாசம் செய்தே தீருவேன் என்று இராமன் காட்டிலேயே தங்கிவிட்டதால், இராமனுடைய பாதுகைகளைக் கொண்டுவந்து சிம்மாசனத்தில் வைத்து, இராமனின் பிரதிநிதியாக இருந்து பரதன் ஆட்சி செய்கிறான். இராமன் இல்லாமல் அயோத்திக்கு வரப்போவதில்லை என்ற உறுதியுடன், அயோத்தியின் எல்லையிலிருந்தே நந்திக் கிராமத்தில் இந்த அரசு நடக்கிறது.

அன்றொரு நாள்......

வழமை போலவே இராமனுடைய பாதுகைகளைப் பூஜை செய்துவிட்டு அமர்ந்த பரதன், மாண்டவியின் குரலில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்ததை அவதானித்தான்.

“மாண்டவி! ஏதாவது சொல்ல நினைக்கிறாயா?” என்று அவளிடம் கேட்டான்.

கைகேயியை வெறுத்து, அவளைத் தன் அன்னையில்லை என்று கூறிய பரதன், இன்று வரை கைகேயியை ஏற்கவில்லை. இதனால் மனமுடைந்து போய் இருக்கும் கைகேயியின் வேதனையைத் தீர்ப்பது தன் கடமை என்று மாண்டவி நினைத்தாள்.

“அரசே! தங்களின் கருத்துக்கு மாறாக நான் பேசுவதை மன்னிக்க வேண்டும். தங்கள் தாயைத் தாங்கள் வெறுப்பது சரியா?

பரதன் அமைதியானான்.

தந்தை இறந்ததும், தமையன் காடு சென்றதும், இவற்றுக்குக் காரணமான கைகேயியை வெறுத்து, நான் உன் மகனேயல்ல என்று வெளியேறியபின் இன்றுவரை அவன் அவளைச் சந்திக்கவில்லை.

“நீங்கள் ஸ்ரீராமனுடைய தம்பி. அந்த உத்தமர் மற்றவர்களை வெறுப்பதை விரும்புவாரா? அன்பு, கருணை, கனிவுக்கு இருப்பிடமான அவர், தாயை வெறுக்கும் உங்கள் செயலை ஏற்றுக்கொள்வாரா? யோசியுங்கள். அனைத்து ஜீவன்களிலும் இறைவன் நிறைந்திருக்கிறார். அன்னையை வெறுப்பது இந்த இறைவனையே வெறுப்பது போல் ஆகாதா?”

“அப்போ, என் தாய் கேட்ட வரம் நியாயம் என்கிறாயா?”

“அல்ல..... தங்களை விடவும் இராமனை அவர் மேலாகப் போற்றி வளர்த்தவர். இராமனை தந்தை ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கவும், அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைக்க வேண்டும் என்று தங்களுக்குக் கற்றுத் தந்தவர் தங்கள் தாய். அவர் இப்படி நடந்து கொண்டால் அதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று யோசிப்பதை விட்டு, தாங்கள் தாயிடமிருந்து இப்படி விலகி இருப்பது நியாயமா என்று தான் கேட்டேன்.”

பரதன் மனைவியை வியப்புடன் பார்த்தான்.

“தங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. தாய் என்பவள், உதிரம் தந்து, உயிர் சுமந்து எம்மைப் பெற்றெடுக்கும் தெய்வம்.”

“மிகச் சரியாகச் சொன்னாய் மாண்டவி! அண்ணன் கூட என் தாயை அன்னையே என்றுதான் அழைத்து வணங்கினார். அவர் மனதில் யார் மீதும் கோபமோ வெறுப்போ இருக்காது. அண்ணன் வரும்வரை அயோத்திக்குத் திரும்பமாட்டேன் என்று சபதம் செய்திருப்பதால் நான் இப்போது அமைதி காக்கிறேன். அண்ணனின் நலம் கருதியே அந்த வரங்கள் கேட்கப்பட்டன என்பதை நான் அறிவேன். நான் அயோத்திக்கு வரும்போது என் அன்னையைக் கண்டு வணங்குவேன்.”

“மிக்க நன்றி அரசே! தங்கள் அன்னையருக்குப் பணிவிடை செய்ய எனக்கு அநுமதி வேண்டும்.”

“நல்லது செய்ய என்றும் என் அநுமதி உனக்கு உண்டு மாண்டவி!”

“மகனைப் பிரிந்து தவிக்கும் அந்த உள்ளத்துக்கு ஆறுதல் தர வேண்டியது என் கடமை என்று மாண்டவி நினைத்துக்கொண்டாள்.”

In the epic Ramayanam, Barathan, younger brother of Sri Rama, told the following thing on their wedding day to his wife:

‘Mandavi! Apart from the fact that we are husband and wife, we have to be best friends, ever sharing a great friendship between us. More than respecting each other, love should be the main thing that fills our hearts. You are my beloved friend ever.’

On hearing these words, Mandavi filled her heart with Barathan, with pride. She understood the fact that, one who considers his wife as a friend would always be sure to give priority to his wife’s opinions and wishes.

After Rama’s departure to the jungle life, Barathan refused to be the king of Ayothi, and in order to bring back his brother, decided to leave. Ayothi. He told Mandavi about his decision. ‘I won’t return to Ayothi without my brother Rama. You are my better half. I want to hear your opinion about this decision of mine.’

‘My dear! I will agree with any decision you make. You have now become closer to my heart than before, I feel.’ Mandavi told happily.

Since Rama began to live in the jungle, according to his father’s order. Barathan brought Rama’s footwear, kept it on the throne and ruled the kingdom deputising Rama, with determination that without Rama he would never return to Ayothi. He remained in a village named Nanthi Gramam located at the border of Ayothi.

One day, Barathan as usual, worshiped Rama’s precious footwear and after that he noticed something different with his wife’s voice.

‘Do you want to say something Mandavi?’ he asked.

After ignoring Kaikeyi and claiming she was not his mother, Barathan until now, didn’t accept her or contacted her.

So, ‘Kaikeyi’s heartbroken condition should be taken away’, Mandavi thought.

'My respected! Please forgive me for saying this against your opinion. It is correct that you ignore your mother?'

Barathan remained silent. Since, father's death and Rama's departure to the jungle were caused by his mother Kaikeyi's actions; he never wanted to meet her again.

Mandavi continued:-

'You are Sri Rama's brother. Will that great man ever accept the attitude of hatred to other people? Would that gentleman of love and mercy accept the ignorance that you display towards your mother, Is not that the same as showing ignorance to God?'

'So, are you saying that the boon my mother asked or requested is correct?'

'No dear. It's not that! Your mother loved Rama more than she loved you. She taught you to consider Rama as your father, and to always respect him . There should be a valid reason your mother had, for requesting this boon. Instead of thinking like that, why do you hate her? Is it fair? That's what I asked.

'Since you know everything, no need for me to explain all these to you. A mother is like a God giving us life.'

'Well said Mandavi. Even my brother, like me, used to call my mother as his 'mother!' He never hates or gets angry with anyone.To keep my promise, I won't go back to Ayotthi until my brother Rama comes back. Whenever I return to ayothi, I will definitely meet my mother and praise her' Barathan said.

'Thank you my loving king. Please give me permission to look after your mother at Ayothi.'

'My permission is always there for you to do good things Mandavi'.

'It's always my duty to console the frustrated mind of a mother' Mandavi thought.

## ஆறுமுருகனும் ஆடி மாதமும்

கந்தப் பெருமானுக்கு திதிகளில் சஷ்டி, கிழமைகளில் வெள்ளிக்கிழமை, நட்சத்திரங்களில் கார்த்திகை என விரதங்கள் உண்டு. இவற்றில் எல்லாக் கார்த்திகையும் விசேஷம் என்றாலும் ஆடி மாதத்தில் வரும் கார்த்திகையும் தை மாதத்தில் வரும் கார்த்திகையும் சிறப்பானவை. இவை இரண்டிலும் ஆடிக் கார்த்திகையே முருகனுக்கு மிக மிக உகந்தது.
கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்ததால் முருகனுக்குக் கார்த்திகேயன் என்ற பெயர் வந்தது. "கந்தன் தனை நீர் போற்றிய கடனால் இவன் உங்கள் மைந்தன் எனும் பெயராகுக"

-கந்தபுராணம்

நன்றி: சக்தி விகடன் 04.08.2005

# கூத்தனின் பன்னிரு கூத்துக்கள்

திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
சிவபுரவளாகம்

இறைவன் எல்லையில்லாத கூத்துக்களை அளவற்ற எண்ணிக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான். அவற்றை ஆடற்கலை வல்லுநர்கள் பலவாறு நுட்பமாக ஆராய்ந்து இறைவன் அருளை நினைத்து அவற்றிற்குப் பெயர் இட்டுள்ளனர்.

ஆதியில் ஒரு இலட்சம் கூத்துக்கள் வகைப்படுத்தப்பட்டன. அதிலிருந்து 1008 கூத்துகளைத் தேர்ந்தெடுத்து ஆடினர். பின்னர் 108 கூத்துகளைத் தேர்ந்தெடுத்துப் போற்றினர். அவர்கள் தொகுத்துள்ள 108 கூத்துகளில் இறைவன் தானே தனித்து உவந்து ஆடியவை. நாற்பத்தெட்டாகும்.

உமையவளைச் சேர்த்துக் கொண்டாடியது முப்பத்தாறு. திருமாலுடன் ஆடியது ஒன்பது. முருகனுக்காக ஆடியது மூன்று. தேவர்களுக்காக ஆடியது பன்னிரண்டு. இந்தக் கூத்துக்களைப் பற்றிய விரிவான செய்திகளை அகத்தியம், பரதம், கூத்து நூல் முதலியவற்றில் விரிவாகக் காணலாம்.

கூத்துநூல் என்னும் ஆடற்கலையை விவரிக்கும் நூல், சிவபெருமானின் கூத்துகளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. அந்நூலில் பெருமான் ஆடும் பன்னிரண்டு கூத்துக்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. அந்நூலில் காணப்படும் படிமவியல் என்னும் பகுதி சிவபெருமானின் ஆடற்கோலங்களை விளக்குகிறது. ஒவ்வொரு ஆடலுக்கும் இரண்டு மூன்று திருக்கோலங்களின் வர்ணனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் படிமவியலில் 96 கோலங்கள் காட்டப்படுள்ளன.

1. அல்லியம்:

அல்லியம் என்பது காலை தொடங்கும் அதிகாலைப் பொழுது. அல்லியம் என்பதை இருள் விலகும் நேரம் என்பர். இவ்வேளையில் கொட்டம் என்னும் கூத்தினை ஆடுகின்றான், இது இலக் உற்பத்தியையும், மகிழ்ச்சியையும் குறிக்கும் நடனமாதலின் ஆனந்தத் தாண்டவம் என்று அழைக்கப்படுகிறது. தில்லையில் பெருமான் ஆனந்தத் தாண்டவத்தை ஆடிக் கொண்டிருக்கிறான்.



2. எல்லியம்:

இது பகல் மறைந்து இரவு தொடங்கும் சந்தியா நேரத்தைக் குறிப்பதாகும். இது சந்தித் தாண்டவம் எனப்படுகிறது. இதனைச் சந்தியா தாண்டவம் எனவும் அழைப்பர். மதுரையில் பெருமான் சந்தியா தாண்டவத்தை ஆடிக் கொண்டிருக்கிறார்.

3. பல்லியம்:
பல்லியம் என்பது முரசு. முரசொலிக்க ஆடும் நடனம். இதை ஒட்டரம் அல்லது சுத்ததாண்டவம் என்பர். இது கயிலை மலையில் ஆடிக் கொண்டிருக்கும் தாண்டவம்.

4. உள்ளம்:
இது உள்ளத்தின் அசைவானது. ஆசை எனப்படும் காமமே உள்ளத்தை அசைத்து செயற்படு கிறது. ஆசை இல்லையேல் மனதில் சலனமில்லை. அதையொட்டி இதனைக் காமம் என்பர். காமத்தின் வெளிப்பாடே சிருங்காரம். (ஸ்ருங்காரம்) இந்த நாட்டியத்திலிருந்தே பரத நாட்டியம் பிறந்ததாகக் கூறுவர்.

5. நுதல்விழி:
நுதல்விழி என்பது நெற்றிக்கண். நெற்றிக்கண் கொண்டு திரிபுரங்களை ஏரித்தான் சிவபெருமான். அதனால் இது திரிபுரம் எனப்பட்டது. இந்தத் தாண்டவம் திரிபுரத் தாண்டவமாகும். இதைப் பெருமான் திருவதிகையில் ஆடினான் என்பர். பாண்டரங்கில் திசைமுகன் காண இதை ஆடினான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

6. நுதல் கால்:
வலது கால் விரலால் நெற்றிப்பொட்டு இட்டுக் கொள்வதாக இந்த நாட்டியம் அமைந்ததால் நுதல் கால் எனப்பட்டதென்பர். சுட்டி என்றும் கூறுவர். காலை இடுப்புக்கு மேல் உயர்த்துவதால் ஊர்த்துவ தாண்டவமானதென்பர். இதிலிருந்தே சித்திர கலா நாட்டியங்கள் தோன்றியதென்பர். இந்த நாட்டியத்தைப் பெருமான் திருவாலங்காட்டில் ஆடிக் கொண்டிருக்கிறான்.



7. நோக்கம்:
இது பார்வையைப் பல கோணங்களில் கைகளையும் கால்களையும் வளைத்து ஆடுவதாகும். அங்க அசைவுகளையொட்டி இது வித்தாரம் எனப்பட்டது. இதனை முனி தாண்டவம் என்பர்.

8. நுணுக்கம்:
இது தொடர்ந்து நிகழும் மாற்றங்களைக் குறிக்கும். சங்கர தாண்டவம் எனவும் அழைக்கப்படும். தரங்கிணி என்னும் நாட்டியம் இதிலிருந்து பிறந்ததாகும். இத்தாண்டவம் திருநெல்வேலியில் ஆடப்படுவதாகும்.

9. கால்வரி:
வெற்றி பெற்றபின் ஆடும் ஆட்டம் இது. கைகளைக் கொட்டி ஆடுவதால் கொட்டி எனவும் கொட்டிச் சேதம் எனவும் அழைக்கப்பட்டது. இது பிரளய தாண்டவம் என்றும் கூறப்படும். சாலியம் என்பதும் வீர வெறியாடல் என்பதும் இதன் பெயர்களாகும்.

10. பேய்வரி
இது பேய்களுடன் பண்டாரம் என்னும் சுடுகாட்டில் ஆடுவதாகும். இது பூத தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. இதைப் பெருமான் திருவெண்காட்டில் ஆடினான். திருவெண்காடு சுவேத வனம் என்றும் பிரம்ம மயானம் என்றும் ஆதி சிதம்பரம் என்றும் அழைக்கப்படுகிறது இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.

*11.* களிற்றுரி

இது எதிரிகளின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு ஆடும் கூத்து. சிவபெருமான் தாருகாவனத்து ரிஷிகள் அனுப்பிய யானையினதும் தோலை உரித்து அவற்றைப் போர்த்துக் கொண்டு ஆடினார். அப்படி ஆடும் ஆட்டம் குஞ்சரம் எனப்பட்டது. இதிலிருந்து ராஜ நாட்டியம் தோன்றியதென்பர்.

*12.* நச்சம்

நச்சு என்பது நஞ்சினைக் கொண்டுள்ள பாம்புகளைக் குறித்தது. பாம்புகளை ஏந்தி அழகாக ஆடியதால் சுந்தரத் தாண்டவம் என்றும் (புஜங்கம் என்றால் பாம்பு) புஜங்கத் தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. பெரும்பாம்பாகிய வாசுகி அளித்த விஷத்தை உண்டு பித்தனைப் போல் ஆடியதால் பித்த நடனம் எனவும் அழைகப்படுகிறது.

உசாத்துணை நூல் :
ஆன்மிகம்



*19*ஆம் பக்கத் தொடர்ச்சி..

சிவபெருமான் உயிர்களுக்கு உடம்பைத் தந்து உலகைத்தந்து, உலகத்தில் வாழவைத்து அதன்மூலமாக தன்னைப் பக்தி செய்து அதன் மூலமாகத் தன்னோடு சேர்த்துக் கொள்வதற்கான நெறியைக் காட்டுகின்ற ஒரு சிறப்பான நூல் வேதம், சிவாகமம். அந்த வேதம் சிவாகமம் சிவபெருமானே அருளிச் செய்தது. மனிதர்களால் ஆக்கப்பட்டது அல்ல. அந்த வேத சிவாகமங்களை மனிதன் அருளவில்லை. உயிர்களுக்கு உலக வாழ்வும் தெரியாது. அந்த ஆகமம் என்னும் வாக்கியம் மூன்று எழுத்துக்களை உடையது. ஆ-க-ம என்ற மூன்று எழுத்து காணப்படுகிறது. ஆ - பாசம் எனவும், க - பசு எனவும், ம - பதி எனவும் பொருள்படும். ஆகவே பதி பசு பாசம் ஆகிய முப்பொருளை உணர்த்துகின்ற திரிபதார்த்த இலட்சண நூல் என்பது ஆகமம். அந்த ஆகமத்தில் இருந்துதான் எல்லா நூல்களும் வந்தன. ஆகமம் எமக்கும் முதல் நூல் சிறப்பு நூல். மற்றைய சமயங்களுக்கெல்லாம் மனிதர்களால் உண்டாக்கப்பட்ட நூல், சைவ சமயத்திற்கு சிவ பெருமானே அருளிச் செய்தநூல்.

# பாஞ்சாலி சபதம்



துரியோதனன், மாமன் சகுனியின் வஞ்சனைச் சூதில், பாண்டவர்தம் தேவி பாஞ்சாலியும் தனக்கு அடிமையாகி விட்டதும், மகிழ்ச்சியால் தன்னை மறந்து பாகனை அழைத்துத் திரௌபதியைத் தன்னிடம் அழைத்து வரும்படி சொல்கிறான். அவனது முட்டாள் தனத்தைச் சுட்டிக்காட்டி, அவன் தன் அழிவுக்கு வழி தேடுகிறான் எனப் பலவிதமாக அறிவுரை கூறி, “பாண்டவரிடம் மன்னிப்புக் கேட்டு அவர்களிடம் அவன் சூதாட்டத்தில் இழந்த எல்லாவற்றையும் திருப்பிக் கொடுப்பதே நல்லது. நீயே உனக்கு அழிவைத் தேடிக் கொள்ளாதே. அதனால் பாரதப்போர் வரும், நீ அழிந்து போவாய்” என்று விதுரன் கூறுகிறார். மேலும் கொதிப்படைந்த துரியோதனன், “சீ மடையா! நீ கெட்டொழிந்து போ. உனக்கு எப்போதும் எமக்குச் சாபமிடுவதே வேலை. இப்போது யாரும் இங்கே உனது அறிவுரையைக் கேட்கமாட்டார்கள்” என்று உரக்கக் கத்தினான். பின்பு தேர்ப்பாகனை அழைத்து, “நீ போய் இரண்டு கணத்தில் பாண்டவரின் இல்லத்தரசியாகிய பாஞ்சாலிக்குப் பாரத நாட்டின் அரசன் உன்னை அழைத்தான்” என்று சொல்லி அவளை இந்த அரச சபைக்கு அழைத்து வா என்று கட்டளை இட்டான்.

“பாண்டவர்தாம் நாளைப் பழியினைத் தீர்த்திடுவார்,
மாண்டு தரைமேல், மகனே! கிடப்பாய் நீ..”

பாண்டவர்தம் பாதம் பணிந்தவர்பாற் கொண்டதெலாம்
மீண்டவர்க்கே ஈந்துவிட்டு, விநயமுடன்
“ஆண்டவரே! யாங்கள் அறியாமையால் செய்த
நீண்ட பழியிதனை நீர் பொறுப்பீர்” என்றுரைத்து
மற்றவரைத் தங்கள் வளர்நகர்க்கே செல்லவிடீர்.
குற்றம் தவிர்க்கும் நெறியிதனைக் கொள்ளீரேல்
மாபாரதப்போர் வரும்; நீர் அழிந்திடுவீர்!

தேர்ப்பாகன் விரைவாகப் பாஞ்சாலியின் அரண்மனைக்குச் சென்றான். இப்படி ஒரு அநியாயமான கட்டளையைத் தான் நிறைவேற்ற வேண்டியதையிட்டு துன்பம் தோய்ந்த மனத்தினனாய் குரல் நடுங்கப் பாஞ்சாலியின் முன்பு நின்று, “அம்மையே! உன்னைப் போற்றி வணங்குகின்றேன். அறத்தைக் காக்கத் தோன்றிய மாதரசியே! உன் பாதங்களை வணங்குகிறேன்” என்று சொல்லிப் பணிவுடன் அவள் பாதங்களை வணங்கி நின்று, “தாயே! நின் கணவர் கொடிய விதி வசத்தால் மாமன் சகுனியுடன் ஆடிய சூதாட்டத்தில் நாடு, செல்வம், போர்ப்படை வீரர்கள், பலமிக்க யானைப்படை, குதிரைப்படை, போன்ற எல்லாவற்றையும் இழந்த பின்பு மாமனின் வஞ்சனைச் சூதில் சகோதரர்களை மட்டுமன்றித் தன்னையும் இழந்துவிட்டார். அது மட்டுமன்றி பின்பு தாயே! அதனை என்னால் வாயால் சொல்லவும் முடியவுமில்லை. அன்னையே உம்மையும் பணயமாக வைத்து இழந்துவிட்டார். இப்போது எம்மரசன் அங்கே எல்லோரும் கூடிய சபைக்கு உம்மையும் அழைத்து வரும்படி எனக்குக் கட்டளையிட்டு என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்” என்று தேர்ப்பாகன் பணிவுடன் சொன்னதுமே, சினமுற்ற பாஞ்சாலி “யார் சொன்ன வார்த்தையடா? சூதாடும் ஒரு சபையினிலே வீரமும் பெருமையும் வாய்ந்த அரசகுலப் பெண்கள் வரும் வழக்கமுண்டோ? யாருடைய ஆணையால் என்னை வரும்படி அழைக்கிறாய்?” என்று கேட்டாள். அதற்கு காவலன், “அரசன் துரியோதனன்” என்று கூறினான். “நல்லது, நீ இப்போது அங்கு போய் நடைபெற்ற விவரங்கள் எல்லாவற்றையும் அறிந்து வா. சூதில் வல்லவனான சகுனியிடம்

தம்மை இழக்குமுன்பு என்னை வைத்து இழந்தாரா? அல்லது தம்மைத் தோற்ற பின் என்னைப் பணயமாக வைத்திழந்தாரா? என்று அந்தச் சபையினரிடம் கேட்டுத் தெரிந்துவா" என்று கூறினாள்.

"நல்லதுநீ சென்று நடந்ததைக் கேட்டுவா
வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
என்னை முன்னே கூறி இழந்தாரா? தம்மையே
முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா?"

பாகனைத் தைரியத்துடன் விவரத்தை முதலில் அறிந்து வா என்று கூறிய பின்பு பாஞ்சாலி தன்னந்தனியாளாய் தனது துயரைப் பகிர்ந்து கொள்ள எவருமில்லாத படியால் மனம் தவித்துத் தளர்ந்துபோய் அவளது மலர் போன்ற கண்களில் முதல் தடவையாகக் கண்ணீர் பெருகச் சோர்வுற்றுக் கொடிய துரியோதனனால் தனக்கு என்ன நேருமோ என்று பயமுற்றுப் பேயைக் கண்ட குழந்தை போல திகிலுற்று முகம் வெளிற ஏங்கியபடி இருந்தாள்.

பாஞ்சாலியை அழைக்கச்சென்ற தேர்ப்பாகன் திரும்பி அரசவைக்குச் சென்று வாள்வீரம் பொருந்திய அரசே நான் அந்த பொன்னரசியின் பாதங்களைப் பணிந்து வணங்கி வருவீர்கள் என்று அழைத்தேன். அதற்கு அம்மாதரசி, "என்னை முதலில் வைத்து இழந்தபின் தன்னை என் மன்னர் வைத்து இழந்தாரா? அல்லது அதற்கு மாறாகத் தம்மை முன்பு இழந்த பின்பு என்னை இழந்தாரா? என்று இந்த அரசவையில் இருப்பவர்களிடம் விவரம் கேட்டுத் தெரிந்துவா" என்று அந்த மின்னல் கொடிபோன்ற அரசியார் எனக்குக் கட்டளையிட்டார். அதனால் நான் இங்கு திரும்பி வந்துள்ளேன் என்று பாகன் கூறினான். பெருமைமிக்க பாண்டவர்கள் மனம் மிக வேதனையால் நொந்துபோய் தம்மை இழந்து உரிமை இழந்து எதுவும் பேச முடியாத நிலையில் அமர்ந்திருந்தனர். அந்த அரசவையில் கூடியிருந்த அரசர்களெல்லாரும் நடக்கக் கூடாத ஒன்று நடப்பதைக் கண்டு பேசமுடியாத ஊமைகளாக அதிர்ச்சியால் பேச்சிழந்து அங்கே அமர்ந்திருந்தனர். அந்த அரசவையில் மூத்தோர்கள் பேராசான்கள் (துரோணர், கிருபாச்சாரியார், பீஷ்மர்), பேரரசர்கள் யாவரும் - இருந்தபோதும், பெண்ணரசியாகிய பாஞ்சாலியைப் பணயமாக வைப்பதைக் கூடத் தடுத்து நிறுத்த முடியாதவர்களாக ஏன் இருந்தார்கள் என்பது வாசகர் மனதில் விஸ்வரூபமாக எழும் ஒரு கேள்வியாகும்.

பாஞ்சாலி வருகைக்காக ஆவலுடன் காத்திருந்த துரியோதனன் பாகன் திரும்பி வந்து சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் மனம் ஏமாற்றத்தாலும் கோபத்தினாலும் கொதித்துப் பொங்கியெழ வெறிபிடித்தவர் போல, "குழந்தைத் தனமாகக் கதைக்கிறாயே! இப்போது எனது பெருமையை, நான் பாண்டவர்களைத் தோற்கடித்த திறமையை நீ அறியவில்லைப்போல இருக்கிறது. அந்தக் கவர்ச்சியான கருமையான கண்களுடையவளான பாஞ்சாலியின் கதையைக் கேட்டு வந்து எனக்குச் சொல்கிறாய். கிளிகளின் இனிமையான குரலையுடைய பாஞ்சாலியின் காதிற்கு இனிமை தரும் பேச்சைக் கேட்டு இன்பமடையவே என் மனம் ஆசைப்படுகிறது. இங்கு வந்து அவள் விரும்பிய கேள்விகளைக் கேட்கலாம். சொல்லவேண்டிய எதையும் தாராளமாகச் சொல்லலாம். அதற்கு அவள் முதலில் இந்தப் பெரிய அரசசபைக்கு நேராக வரவேண்டும். அதற்குப்பின் தான் அதனைச் செய்ய முடியும்" என்று கூறிய மனிதப் பண்பற்ற சிறுமைக் குணமுள்ள துரியோதனன் தொடர்ந்து, "அவள் என்ன கூட்டுக்குள் இருக்கும் பறவையா? இல்லையே! ஐந்து கணவருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண் அல்லவா? அவளுக்கு வெட்கம் எதற்கு?" சிறுமைத்தனமான துரியோதனன் பாஞ்சாலியின் பெருமையை உணராது கேவலமாக இக்கேள்வியைக் கேட்கிறான். "நான் ஆத்திரங் கொண்டு ஏதாவது தாறுமாறாகச் செய்ய முன்பு, வாசனை மிக்க கூந்தலையுடையவளாகிய (தலைமுடி) பாஞ்சாலியை இங்கு கூட்டிவா!" என்று கூறிய துரியோதனன் தொடர்ந்து பாகனைப் பார்த்து, "மன்னனாகிய நான் அழைத்தேன் என்று நீ சொல்லவும். அவள் அதனை மறுத்துச் சொல்வதோ? உன்னைச் சின்னாபின்னமாக்குவனடா ஒரு கணப்பொழுதில் (நொடிப்பொழுது) அவளை இங்கு கூட்டிக் கொண்டுவா" என்றான்.

பாகன் திரும்பிப் போய்ப் பாஞ்சாலியை வணங்கி நின்று துரியோதனன் கூறியவற்றைக் கூறுகிறான். பாஞ்சாலி மேலும் துன்பமடைந்தவளாய், “தம்பி ஏன் என்னைத் திரும்பி வந்து வீணாக வரும்படி கூப்பிடுகிறாய்?” என்று கேட்டுவிட்டு அரச நீதிநெறியைத் தெளிவாக அறிந்த பாஞ்சாலி அதனைப் பாகனுக்கு விளக்கிக் கூறுகிறாள். “எனது கணவராகிய தர்மன் தன்னையும் தன் தம்பிமாரையும் சூதாட்டத்தில் வைத்திழந்து விட்டார். அதன்பின்பு என்னை எந்தச் சாத்திர முறைப்படி பணயமாக அவர் வைக்கலாம்? அந்த உரிமை (என்னைப் பணயமாக வைக்கும் தகுதி) அவருக்கு இல்லை. அவர் சூதாட்டத்தில் தன்னை இழந்துவிட்டார். நான் இப்போது அவரின் மனைவி இல்லை. நான் துருபதன் என்னும் சக்கரவர்த்தியின் மகள். அவர் அரச பதவியை இழந்து துரியோதனனாதியோருக்கு அடிமையாகி அவர்கள் இட்ட வேலையைச் செய்யப்போகும் பணியாளர் என்று சொன்னபின்பு இப்படியான துரோகச் செயல் அந்தக் கௌரவர் சபையில் எப்படி நடந்தது?” என்று அறியும் வகையில் பல கேள்விகளைப்பாகனிடம் கேட்கிறாள். “அந்தக் கௌரவர்களின் அரசசபையில் அறநெறி அறிந்தவர்கள் எவருமில்லையா? அவர்கள் நாடு பறிமுதல் ஆவதற்கு முன்பே சாத்திரங்கள் நீதிநெறி எல்லாம் செத்துவிட்டதோ? புகழ் பொருந்திய ஆசான்மார்கள் (ஆசிரியர்கள் - கிருபாச்சாரி, துரோணாச்சாரி) உள்ள அந்தச் சபையிலே பாண்டவரின் செல்வமெல்லாம் துரியோதனன் சகுனியால் சூறையாடப்படுவதைப் பார்த்துக் கொண்டு (தடுக்க முயற்சி செய்யாது) இருந்தார்களா? எனது மானம் அழிவதும் காண்பார்களோ? இந்த அநியாயத்தை அந்த நன்னெறி அறிந்த அரசர்களும், நாட்டை நீதி நெறிப்பட ஆட்சி செய்ய வழிகாட்டியாக இருக்கும் ஆசான்களும் இந்த நம்பிக்கைத் துரோகத்தைப் பார்த்தக்கொண்டு ஏன் வாளா (ஒன்றும் செய்யாது) இருந்தனரா? இப்படியும் நடக்குமா?” என்றும் பாஞ்சாலியின் ஆதங்கத்தை ஆற்றாமையைத்தன் பாடலில் ஓங்கி உரைக்கின்றார்; கண்டிக்கிறார்.

“இன்பமும் துன்பமும் ,மனிதர்களுக்கு வருவது இயல்புதான். ஆனால் நாட்டை ஆளும் மன்னர்கள் தம் விருப்பு வெறுப்பு ஆகிய உணர்வுகளைப் புறந்தள்ளி நாட்டில் நலத்தையே முன்வைத்து ஆட்சி செய்தல் வேண்டும். அதற்கு மாறாக அரசின் பெருமை அழிந்து போகும் வகையில் ஆட்சிசெய்யக் கூடாது. அறத்தை அழிப்பதில் மகிழ்ச்சியடைவார்களோ அன்பும் தவமும் உடைய பெருமக்கள் இங்கு நடந்ததைப் பார்த்து மகிழ்ச்சியானவர்களோ? எனது மனத்தில் எழுந்த கேள்விகளுக்கான மறுமொழியை (பதிலை) அந்த அரசசபையில் உள்ளவர்களிடம் போய்க் கேட்டறிந்து வருவாய்” என்று பாகனை மீண்டும் திரும்ப அரச சபைக்கு அனுப்புகிறாள் பாஞ்சாலி. அவள் கட்டளையை ஏழைப்பாகனால் மறுக்கமுடியுமா? அதனைச் செய்ய வேண்டியது அவன் கடமை அல்லவா? ஆனால் மனதில் திடமாக ஒரு முடிவெடுத்தான். என்னைக் கொன்றாலும் பரவாயில்லை. பாஞ்சாலியின் கேள்விகளுக்கு எல்லாம் அவர்கள் சரியான பதிலைச் சொல்லி அனுப்பாவிட்டால் எக்காரணம் கொண்டும் அதற்கு நான் இணங்கி இங்கே திரும்பவரமாட்டேன் என்று தன் மனதில் கொண்டு அந்த அரசசபைக்கு மீண்டும் சென்று பாஞ்சாலி கூறியவற்றையும் கூறினான். அவள் மாதவிடாயில் (பெண்களுக்கு மாதமொருமுறை வரும்) இருக்கிறாள். அதனாலும் அவள் வரமுடியாது என்றும் குறிப்பிட்டான்.

“இன்பமும் துன்பமும் பூமியின் - மிசை
யார்க்கும் வருவது கண்டனம் -எனில்
மன்பதை காக்கும் அரசர்தாம் - அற
மாட்சியைக் கொன்று களிப்பரோ? -அதை
அன்பும் தவமும் சிறந்துளார் - தலை
யந்தணர் கண்டு களிப்பரோ? - அவர்
முன்பென் வினாவிடை மீண்டும் போய்ச் - சொல்லி
முற்றுந் தெளிவுறக் கேட்டுவா!”

அநுஜா

# RUBY'S
CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு





திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton | THISTLE HOTELS more than just accommodating | Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம்மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)